Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல் & மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி, (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
❖ பல் கட்டுவதற்கும்,
❖ பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
❖ இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 19 (14.12.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்:75

# நாடாளுமன்ற தேர்தலுக்குத் தயாராகுமாறு கட்சி உறுப்பினர்களிடம் ரணில் கோரிக்கை!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை பொதுத்தேர்தல் ஒன்றுக்கு தயாராகுமாறு, அந்தக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

நேற்று நடைபெற்ற கட்சியின் 49 ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி மூன்று முக்கிய அமைச்சுக்களை பறித்ததையடுத்து, அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால், சமாதானத்தை எதிர்பார்த்திருந்த மக்கள் தற்போது யுத்தம் ஏற்படுமோ என அச்சமடைந்துள்ளனர்.

எதிர்பார்த்திருந்த வேலை வாய்ப்புக்களும், அபிவிருத்தியும் அரசியல் நெருக்கடியால் கேள்விக்குறியாக மாறியுள்ளது.

தனிநாடு ஒன்றைக்கோரி போராட்டம் நடத்தி வந்த விடுதலைப் புலிகள் - சமஷ்டி முறையில் அதிகாரங்களை பகிர்ந்துகொள்ள முன்வந்துள்ளனர். இதற்காக அவர்கள் கடந்த ஒக்ரோபர் மாதம் இடைக்கால தீர்வு யோசனைகளையும் சமர்ப்பித்துள்ளனர்.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தைவிடவும் நாடாளுமன்றத்திற்கு கூடுதல் அதிகாரம் உள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



தேர்தல் திருவிழாவுக்கு ரணில் ஆயத்தமாகிட்டார்...!

# இராணுவத் தளபாடக் கொள்வனவுக்காக முப்படை அதிகாரிகள் குழு சீனா செல்கிறது!

## நவீன ஆயுதங்கள், படகுகள், விமானங்கள் வாங்கத் திட்டம்

(கொழும்பு)

**படையினருக்கான நவீன ஆயுதங்கள், போர்விமானங்கள், ரோந்துப் படகுகள் உள்ளிட்ட ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காக முப்படைகளையும் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று நாளை சீனாவுக்குச் செல்லவுள்ளது.**

தொண்டர் படைகளின் கட்டளையிடும் அதிகாரியும், தற்போது யாழ்.குடாநாட்டுப் படைகளின் கட்டளைத் தளபதியாக பதவி வகிப்பவருமான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் தலைமையிலேயே முப்படை அதிகாரிகள் குழு ஆயுதக் கொள்வனவுக்காக சீனா செல்கிறது.

இந்தக் குழுவில் இராணுவத்தின் சார்பில் - கேணல் அத்துல ஜெயவர்த்தன, கேணல் றொஷான் சில்வா, மேஜர் தெஹிவத்த ஆகியோரும், கடற்படையின் சார்பில் - நடவடிக்கை இயக்குநர் கொமடோர் ஜெயந்த பெரேரா, கொமாண்டர் டி.டி.ஆர்.குணதிலக ஆகியோரும், விமானப்படையின் சார்பில் - குறூப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## லொறி குடை சாய்ந்ததில் சாரதி பலி; நடத்துநர் காயம்!

(கிளிநொச்சி)

வேகமாக சென்றுகொண்டிருந்த லொறி, கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகே குடைசாய்ந்ததில், சாரதி உயிரிழந்தார். நடத்துநர் படுகாயமடைந்தார்.

கிளிநொச்சி - உருத்திரபுரம் பகுதியில் நேற்று மாலை நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் கிளிநொச்சி விவேகானந்த நகரைச் சேர்ந்த ஆர்.புஸ்பராசா (வயது 53) என்பவரே

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்; யாழ்.குடாவை நோக்கி நகர்கிறது!

(கொழும்பு)

வங்காள விரிகுடாவின் கிழக்குக்கரையில் ஏற்பட்டுள்ள சூறாவளி முல்லைத்தீவுக்கு கிழக்காக 550 கி.மீ தொலைவில் நிலைகொண்டுள்ளதாக, வளிமண்டலத் திணைக்களம் நேற்று மாலை 6 மணிக்கு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நிலத்திலிருந்து பீறிட்ட இரத்தம்; அம்பாந்தோட்டையில் சம்பவம்!

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை பிரதேசத்திலுள்ள வீடொன்றின் அறையின் நிலம் உடைந்து இரத்தம் போன்ற செந்நிறத் திரவம் ஒன்று வெளிவந்துள்ளது. நேற்றுக்காலை வீட்டின் அறையொன்றின் நிலம் திடீரென வெடித்துள்ளது. சாதாரண மனிதர் ஒருவருக்கு இரத்தம் எவ்வாறு வெளியேறுமோ அதேபோன்ற இரத்தவடிவில் இந்த வெடிப்பிலிருந்து இரத்தம் வெளியேறியுள்ளது. சுமார் 15 நிமிடம்வரை அந்தத் திரவம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உயர் பாதுகாப்பு வலயங்கள் சட்டரீதியாக அமைக்கப்பட்டதா?

### சட்டமா அதிபரிடம் உயர் நீதிமன்றம் கேள்வி

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் அமைக்கப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் சட்டரீதியாக அமைக்கப்பட்டுள்ளதா என, சட்டமா அதிபரிடம் உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உட்பட மூவர் தொடுத்த அடிப்படை உரிமை மீறல் வழக்கை விசாரிக்கும் முகமாகவே, நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றம் சட்டமா அதிபரிடம் இந்த வினாவை எழுப்பியுள்ளது.

இந்த வழக்கை உயர்நீதிமன்றம் எதிர்வரும் 19 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கவுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக வழக்கினை பதிவு செய்தவர்கள் - 1992 ஆம் ஆண்டு தமது சொந்த இடமான மாவிட்டபுரத்திலிருந்து இடம்பெயர்ந்துள்ளதாகவும், அந்த இடம் தற்போது பலாலியுடன் சேர்ந்து உயர்பாதுகாப்பு வலயமாக உள்ளதெனவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், விடுதலைப் புலிகளுக்கும் - அரசாங்கத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாதோர் சூடு; இளைஞர் ஒருவர் பலி!

(வவுனியா)

வவுனியா - குருமன்காட்டுப் பகுதியில் நேற்றிரவு இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வவுனியா - தாண்டிக்குளத்தைச் சேர்ந்த சிவானந்தம் சுஜிக்குமார் (வயது 24) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

வவுனியா நகரிலிருந்து மோட்டார் சைக்கிளில் நேற்றிரவு 7 மணியளவில் இவர் வந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முதியவர் வெட்டிக் கொலை; வல்லைவெளியில் சம்பவம்!

(வடமராட்சி)

வல்லை நெசவுசாலைக்கு அண்மையில் கைகள் பின்புறமாக கட்டப்பட்டு கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் முதியவர் ஒருவரின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை தெணியம்பையைச் சேர்ந்த சூரியமூர்த்தி (வயது 62) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் சிக்கி இளைஞன் படுகாயம்!

(கிளிநொச்சி)

வீதித்திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த வேளை, நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த வெடிபொருள் வெடித்ததில் தொழிலாளி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை பரந்தன் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுப்பையா குமாரசிங்கம் (வயது 21) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார். இவர் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற உறுப்பினர் தொகையை 266 ஆக அதிகரிப்பதற்கு ஆலோசனை!

### சிறிலங்கா சுதந்திரக் கட்சி வழங்கியது

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகையை 225 இலிருந்து 266 ஆக அதிகரிக்கவேண்டுமென்று, தேர்தல் பற்றி ஆராயும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

இதன் பிரகாரம் - தேர்தல் மாவட்ட அடிப்படையில் 161 பேரும், விகிதாசார முறைப்படி 80 பேரும், தேசிய பட்டியல் மூலம் 25 பேரும் நியமிப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆலோசனை வழங்கியுள்ளது.

தேசிய பட்டியல் மூலம் தெரிவுசெய்யப்படுபவர்கள் அரசாங்கத்தின் சார்பில் 15 பேரும், ஏனைய 10 பேரும் ஒவ்வொரு கட்சிக்கும் வழங்கப்படவேண்டுமென்று அந்த யோசனையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, சரத் அமுனுகம, ஜோன செனவிரத்ன ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களே இந்த யோசனைகளை முன்வைத்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கரு ஜெயசூரிய, மகிந்த சமரசிங்க, அமரா பியசீலி ரத்நாயக்க, நிமால் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த, நந்தன குணதிலக ஆகியோருட்பட 20 பேர் அடங்கியுள்ளனர்.




EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email. jaffna @ expoair. com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்
(சி -1845)

## நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு

பதிவாளர் பதவிக்காக எதிர்வரும் 16,17,18 ஆம் திகதிகளில் நடைபெற விருந்த நேர்முகப்பரீட்சை பிற்போடப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நேர்முகப் பரீட்சை தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும் என மேலதிக மாவட்ட காணிப் பதிவாளர் எஸ்ஈஸ்வரதாசன் தெரிவித்தார்.

## புத்தக வெளியீட்டு விழா

வன்னிவலய பூச்சியல் ஆய்வாளர் பொன்மயில் இராசதுரையின் 'வன்னிப் பெருநிலப்பரப்பில் நுளம்புகளின் ஆய்வு' புத்தக வெளியீட்டு விழா இன்று பி.ப. 3.00 மணிக்கு வைத்திய கலாநிதி கே.சுஜந்தன் தலைமையில் கிளிநொச்சி மகாவித்தியாலத்தில் நடைபெறவுள்ளது.

### அவுஸ்ரேலியாவுக்கெதிரான

# இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இக்கட்டான நிலையில் இந்தியா!





அவுஸ்ரேலியாவிற்கு எதிராக அடிலெய்டில் நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியான நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தில் இந்திய அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 180 ஓட்டங்களை எடுத்து மிகவும் இக்கட்டான நிலையிலுள்ளது.

முன்னதாக நேற்று முன்தினம் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 400 ஓட்டங்கள் என்ற நிலையில் நேற்று ஆடத் தொடங்கிய அவுஸ்ரேலிய அணி 556 ஓட்டங்களை எடுத்த நிலையில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் அணியின் உப தலைவர் ரிக்கிபொண்டிங் அதிக ஓட்டங்களாக 242 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இந்திய பந்து வீச்சாளர்கள் சார்பில் அனில்கும்ளே ஐந்து விக்கெட்டுக்களையும், அகர்கர், அசிஷ் நெஹ்ரா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், இர்பான் பத்தான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து ஆடத் தொடங்கிய இந்திய அணியின் ஆரம்பம் நன்றாகவே இருந்தது. ஆனாலும், ஆரம்பத் துடுப்பாட்டக்காரர்கள் ஆட்டமிழக்க அதன் பின்னர் இந்திய நட்சத்திர ஆட்ட நாயகன் சச்சின் டெண்டுல்கர், அணித் தலைவர் கங்குலி ஆகியோர் முறையே ஒன்று, இரண்டு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இதில் கங்குலி ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்தது குறிப்பிடத்தக்கது. தற்போது அணியின் உபதலைவர் ராகுல் ராவிட் 43 ஓட்டங்களுடன் வி.வி.எஸ். லக்ஸ்மன் 55 ஓட்டங்களுடனும் ஆடிக்கொண்டிருக்கின்றனர்.

அவுஸ்ரேலிய பந்துவீச்சாளர்கள் சார்பில் அன்றூ பிச்சல் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

## நேர்முகத்தேர்வு

வருவாய்பகுதியால் 2003-12-11 ஆம் நாள் நடாத்தப்பட்ட நேர்முகத் தேர்விற்கு வருகை தராதவர்கள் கீழ்வரும் கால ஒழுங்கில் நேர்முகத் தேர்வு நடைபெறுமென்பதை அறியத்தருகின்றோம்.

காலம் :- 2003-12-18
நேரம் :- காலை 9.00 மணி
இடம் :- வருவாய்ப்பகுதி செயலகம், யாழ்சாலை, பளை.

ஆளுகை
மனிதவள மேம்பாட்டுப்பிரிவு,
வருவாய்ப்பகுதி.

(551)

ராஜா யாழ்ப்பாணம்.

தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த
ஏனக்கு 20 உனக்கு 18
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1847)

நிறஞ்சனாஸ் சங்கானை

இன்று மட்டும் அஜித் மீராஜஸ்மின் நடித்த ஆஞ்சநேயா
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
ஜக்கிஷானின் Who am I (கராட்டி)
நாளை முதல் விஜயகாந், கிரண் நடித்த தென்னவன்
(சி-1846)

## யாழ் மாவட்ட துரித அபிவிருத்தி திட்டம் - 2004 திட்ட ஆலோசனைகளைப் பெறுதல்

இடம்பெயர்ந்த, மீளகுடியமர்ந்த மக்களது அவசிய தேவைகளை இனம் காணுதல், அவற்றை ஈடுசெய்வதன் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான துரித அபிவிருத்தி திட்டமொன்றை தயாரித்து அதனை 2004 ஆம் ஆண்டில் அமுல் நடத்த நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ பிரதம அமைச்சர் எம்மைப் பணித்துள்ளார். இதற்கான தேவைகளை இனம் காணுவதற்கு சமூக நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களது முன்மொழிவுகளை பெறுமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

எனவே, இத் திட்டத்தை தயாரிப்பதற்கான, யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த, சகல சமூக நிறுவனங்களும் அவ் அப் பிரதேச மக்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும், அவர்களது உடனடி கஷ்ட நிலையை நீக்குவதற்குமான, செயல்திட்ட ஆலோசனைகளை 25.12.2003 க்கு முன்னர் எனக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

செ.பத்மநாதன்
மாவட்ட செயலாளரும்/அரசாங்க அதிபரும்
(சி/1889)

ஆங்கில அறிவுடன் Diploma சான்றிதழும் வேண்டுமா?

இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழி ELI யின் இலவச தபால் மூல ஆங்கில பாடநெறிகள்

ஆங்கிலத்தில் எழுத, பேச, வாசிக்க, 90 நாட்களில் பயிற்சி அளிக்கப்படும்

இலவசம் இலவசம் Free Free



அழகிய டீ.சேர்ட் ஒன்றுடன
2004ம் ஆண்டுக்கான (Diary) தினக்குறிப்பேடு
2004ம் வர்ண கலண்டர் (Calender)
அடையாள அட்டை (Identity Card)

Diary




(555)

பாடநெறியில் இணையும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 4/50 பெறுமதியான 3 முத்திரை அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

The ENGLISH LANGUAGE INSTITUTE P.O.BOX 083 Kandy Tel: 0777-802849

புத்தம் புதிய 4 சில்லு குட்வில் டிரைக்டர் உற்பத்தியாளர்களின்

புதுவருட ஸ்பெஷல் → ஜனவரி 10 ஆம் திகதி வரை

- S195N ரக என்ஜின் - குதிரை வலு 12
- 02 வருட உத்தரவாதம்
- இலவச சேவை - 6 மாதத்திற்கொரு முறை
- உதிரிப்பாகங்கள் தாராளமாகவும் மலிவாகவும் உள்ளது
- டீசல் லீற்றருக்கு 21 Km
- வேகம் மணிக்கு 22 Km

10% கழிவு




TS 12 B (12HP)

சுழற் கலப்பையுடன் உழவு இயந்திரம்



1.GL 70 - 18 முனைகள்

ரூ.190,000/=

ISO 9001: 94

குட்வில்

ரூ.215,000/=

ஹைட்ரோலிக் இழுவைப்பெட்டியுடன் உழவு இயந்திரம்



ரிப்பிங் ரெயிலர்
1.5 MTS-7'x5'x15'

Show room & Office:
No.5 வுட்லண்ட் வீதி, களுபோவில, தெஹிவளை.

Spares:
55 துட்டுகெமுனு வீதி, தெஹிவளை.

(கொழும்பு புறக்கோட்டையிலிருந்து 120 பஸ்ஸிலேறி பாமன்கடை யப்பான் பாடசாலைக்கு முன்னால் இறங்கவும்)

T.P: (011) 2818415, 0777 351376, Fax: (011) 2818416, 0777 351695

# ஜனவரி 5 முதல் அமெரிக்கா செல்லும் வெளிநாட்டவர் கைரேகை பதியவேண்டும்!

அமெரிக்காவிற்குள்வரும் வெளிநாட்டவர்கள் அனைவரும் ஜனவரி 5 ஆம் திகதிமுதல் கைரேகையை கட்டாயம் பதிவுசெய்யவேண்டுமென, அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

விசா காலாவதியான பின்னரும் நாட்டில் தங்குவோர்களைத் தடுக்கவும், தீவிரவாதிகளை அடையாளம் காணவுமே இந்தக் கைரேகைப் பதிவுமுறை அமுல்படுத்தப்படவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

'யு.எஸ்.விசிட்' என்று பெயரிடப்பட்டிருக்கும் இந்தப் புதிய திட்டம் குறித்து அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சகச் செயலாளர் ஹட்சின்சன் தெரிவிக்கையில்,

செம்டெம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் பாதுகாப்பைப் பலப்படுத்தும்வகையில் இந்தத் திட்டம் அமுலாக்கப்படுகிறது. இதன்மூலம் போலி ஆவணங்களைக்கொண்டு அமெரிக்காவிற்குள் நுழையமுறப்படுபவர்களை - அவர்களது கைரேகை மூலம் எளிதில் கண்டுபிடித்துவிடலாம் எனவும்,

தீவிரவாதிகள் பட்டியலில் இருப்பபவர்களில் யாராவது அமெரிக்காவில் நுழையமுயன்றால் அவர்களை எளிதில் கண்டுபிடித்துவிடலாம். அத்துடன் விசா முடிவடைந்த பின்னர் தங்கியுள்ளவர்களையும் அடையாளம் காணமுடியும் எனவும் தெரிவித்தார்.

# கிரிக்கெட் வீரர் இயன் பொத்தம் செவ்வாயன்று வன்னி வருகிறார்!

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், துடுப்பாட்ட வீரருமான இயன் பொத்தம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சிக்கு வரவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விளையாட்டுத்துறையின் அழைப்பினை ஏற்று - கிளிநொச்சிக்கு வருகைதரும் இவர், கிரிக்கெட் தொடர்பான கருத்துக்களையும், பயிற்சிகளையும் வழங்கவுள்ளார்.

இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்களும், பாடசாலை மாணவர்களும் கலந்துகொண்டு பயன்பெறவுள்ளனர்.

இதேவேளை இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவராக இருந்து பல வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்த இயன்பொத்தமின் கிளிநொச்சி வருகையை வரவேற்கும் வகையில் அன்று மாலை 4 மணிக்கு மன்னார் பள்ளிமுனை அணிக்கும், வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணிக்கும் இடையிலான கண்காட்சி உதைபந்தாட்டப் போட்டி நடைபெறவுள்ளது.

இயன் பொத்தம் இங்கிலாந்து தேசிய உதைபந்தாட்ட அணியிலும் அங்கம் வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ்மா அதிபர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு மீண்டும் நடவடிக்கை

பொலிஸ்மா அதிபரின் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கான நடவடிக்கை மீண்டும் எடுக்கப்பட்டுள்ளதாக அரசியல் அமைப்பு நிர்ணயசபையின் தலைவர் சபாநாயபகர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆராய்வதற்காக எதிர்வரும் 18 ஆம் திகதி அரசியல் அமைப்பு நிர்ணயசபை கூடவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சுமார் 2 மாதங்களாகப் பொலிஸ்மா அதிபர் பதவி நிரப்பப்படாமல் உள்ளது என்றும், பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய ஆனந்தராஜாவின் ஓய்வைத் தொடர்ந்து இன்னமும் புதிதாக ஒருவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்படாமல் இருப்பதாகவும் தெரிவித்தார்.

எனினும், பதில் பொலிஸ்மா அதிபராக ஜனாதிபதியால் இந்திர டீ சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அண்மையில் நான்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர்களின் பணி அனுபவப் பட்டியல் அரசியல் அமைப்பு நிர்ணயசபையால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டபோதும், இந்த நால்வரில் எவரைத் தெரிவு செய்வது என்ற பரிந்துரை இன்னமும் கிடைக்கவில்லை என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

இவ்வாறான அனுமதி கிடைத்த பின்னர் புதிய பொலிஸ்மா அதிபரை ஜனாதிபதி ஊடாக அறிவிக்கமுடியும் என்றும், சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார். (01)

# பலாலி விமானத் தளத்தினை நவீனப்படுத்த இந்தியா உதவும்!

## இராணுவத் தளபதி பலகல்ல தெரிவிப்பு



(கொழும்பு)

பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதையைச் சீரமைத்து நவீனப்படுத்த இந்தியா முன்வந்துள்ளதாகவும், இது தொடர்பான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் இராணுவத் தளபதி ஜெனரல் பலகல்ல தெரிவித்தார்.

தியத்தலாவை விமானத் தளத்தில் பயிற்சிபெற்று வெளியேறும் விமானப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையையடுத்து, நேற்றுமுன்தினம் பத்திரிகையாளர் மத்தியில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் அங்கு தெரிவித்ததாவது,

வடக்கில் பிரதான விமானநிலையமாக விளங்கும் பலாலி விமான நிலையத்தை நவீனப்படுத்தப்படவேண்டியது குறித்தும், அதன் ஓடுபாதையைத் திருத்தியமைக்கவேண்டிய அவசியம் குறித்தும் வெளிநாட்டு நிபுணர்களின் உதவியை எதிர்பார்த்திருந்தபொழுது இந்தியா இதற்கு உதவ முன்வந்துள்ளது என்று கூறினார்.

மேலும், இந்தியாவுக்கான தமது ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் மூலம் இந்த விடயம் சாத்தியமானதாகவும், பலாலி விமான நிலையப் புனரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பமாகும் என்றும் இராணுவத் தளபதி ஜெனரல் பலகல்ல தெரிவித்தார்.

இந்து சமுத்திரத்தின் பிராந்திய பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் - இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில்- இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இடம்பெறும் சமூக விரோதச் செயல்களுக்கு எதிராக இலங்கை மற்றும் இந்தியக் கடற்படைகள் இணைந்து செயற்படும்.

இலங்கை விமானப்படைக்கு தற்காலிகமாக வாடகைக்கு விமானங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும், இலங்கை விமானப்படையின் முன்னேற்றத்துக்கு சகல வசதிகளையும் செய்துகொடுப்பதற்கும் - இந்திய விமானப் படையின் தளபதி முன்வந்துள்ளார்.

இருநாட்டுப் பாதுகாப்புக்கும் பரஸ்பரம் அச்சுறுத்தலாக விளங்கும் தீவிரவாத நடவடிக்கைகளை ஒடுக்கும் வகையில் நிபுணத்துவசேவை, மற்றும் உளவுப்பிரிவு பரிமாற்றத்துக்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

தீவிரவாத அமைப்புக்கள் மூலம் பரஸ்பரம் இருநாடுகளுக்குமிடையே அச்சுறுத்தல்களுக்கு இடமளிக்காத வகையில் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் இரகசியங்களைப் பேணுதல் போன்ற விடயங்களிலும் பொது இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

மேலும், இரத்மலானையிலிருந்து பலாலிக்கு இராணுவ வீரர்களை கூடிய தொகையில் ஒரே முறையில் எவ்வித அசௌகரியமும் இன்றி கொண்டுசெல்வதற்கு உரிய ஒழுங்குகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

இராணுவ வீரர்கள் தமது விடுமுறைகளின்போது இடைநடுவில் முகாம்களில் தங்கியிருந்து வீணாக நேரத்தைச் செலவிடாது துரிதமாகத் தத்தமது வீடுகளுக்குச் சென்று திரும்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பலகல்ல மேலும் தெரிவித்தார்.

## குடாநாட்டில் மீளக்குடியமர்ந்தோரது தேவைகளை ஈடுசெய்ய

# துரித அபிவிருத்தித் திட்டம் அமுல்படுத்த நடவடிக்கை!

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்களது அவசிய தேவைகளை புனர்வாழ்வு பகுதியினரால் ஈடுசெய்வதற்கு ஆலோசனைகள் பெறப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தின் துரித அபிவிருத்தித் திட்டமொன்றைத் தயாரித்து அதனை 2004 ஆம் ஆண்டு அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் ஜெயலத் யாழ். செயலகத்துக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

இதற்கான தேவைகளை இனங்காணுவதற்கு சமூக நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்களதும் முன்மொழிவுகளைப் பெறுமாறும் அமைச்சர் கேட்டுள்ளார்.

எனவே, இத்திட்டத்தைத் தயாரிப்பதற்காக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சகல சமூக நிறுவனங்களும் - அவ்வப் பிரதேச மக்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும், அவர்களது உடனடித் தேவைகளை வழங்குவதற்குமான செயற்திட்ட ஆலோசனைகளை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பு யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதிக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

# 2004 ஆம் ஆண்டுக்கான ஐ.தே.கட்சியின் நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவாகினர்

ஐக்கிய தேசியக் கட்சியின் 2004 ஆம் ஆண்டிற்கான நிர்வாக உத்தியோகத்தர் தெரிவு நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தின் பிரதித் தலைவராக கரு ஜெயசூரியவும், செயலாளராக செனரத் கப்புகொட்டுவவும், பொருளாளராக நிமல் வீரரட்ணவும் தெரிவு செய்யப்பட்டனர். இதுதவிர 71 பேர் கொண்ட நிறைவேற்றுக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய முகமட் - ஐக்கிய தேசியக் கட்சி ஏனைய சிறிய கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைக்க ஆர்வம் கொண்டுள்ளபோதும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் விருப்பத்திற்கு முழுமையாக அடிபணியாது என்று தெரிவித்தார்.

நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் ரவூப் ஹக்கீம் - ஐக்கிய தேசியக் கட்சியுடன் முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும் செயற்படத் தயாராக இருப்பதாகவும், முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு ஐ.தே.கட்சியினாலேயே தீர்வுகாணமுடியுமென தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

## குடாநாட்டின் வர்த்தகத்துறையை மேம்படுத்துவதற்கு

# பருத்தித்துறை - பாண்டிச்சேரி இடையே கப்பல்சேவையை ஆரம்பிக்கவேண்டும்!

## நாடாளுமன்றத்தில் எம்.கே.சிவாஜிலிங்கம் கோரிக்கை



(கொழும்பு)

குடாநாட்டின் வர்த்தகத்துறையினை மேம்படுத்துவதற்கு - தமிழ்நாட்டின் நாகபட்டினத்துறைமுகத்திலிருந்து பருத்தித்துறைக்கு கப்பல் சேவையை நடத்துவதுடன்,

உல்லா சத்துறையை விருத்தி செய்வதற்கு பாண்டிச்சேரிக்கும் - பருத்தித்துறை துறைமுகத்துக்குமிடையே கப்பல் சேவைகளை நடத்த வேண்டுமென்று, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம் தெரிவித்துள்ளார்.

வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, எம்.கே.சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

'மகாபொல' புலமைப்பரிசில் திட்டங்கள் உள்ளிட்ட ஆங்கிலக்கல்வியை மேம்படுத்தும் திட்டங்கள் எதுவும் வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படவில்லை. இந்தப் பிரதேசங்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு - கிழக்கில் ஆங்கிலக் கல்வியை போதிப்பதற்கு ஆசிரியர்களை நியமிக்கவும் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை.

தமிழக அரசின் எதிர்ப்பின் காரணமாக இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல்சேவையை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தூத்துக்குடி - கொச்சின் கப்பல் சேவையும் இன்னும் சாத்தியமாகவில்லை. எனவே நாகபட்டினத்துக்கும் - பருத்தித்துறைக்குமிடையே கப்பல் சேவையை நடத்தினால் பொருட்களை இறக்குமதி செய்வது இலகுவாக இருக்கும்.

இந்தியாவுடன் நெருக்கமான உறவு இருக்கிறது என்று கூறும் அரசு, இது பற்றிச் சிந்திக்கவேண்டும். உல்லாசத்துறையை மேம்படுத்தும் பொருட்டு பருத்தித்துறைக்கும்- பாண்டிச்சேரிக்குமிடையே கப்பல்சேவையை ஆரம்பிக்கவேண்டும்.

இதேவேளை, கிழக்கில் தமிழ் முஸ்லிம் உறவு சீர்குலைக்கப்பட்டு வருவதால் - ஆலங்கேணி, ஈச்சந்தீவு மக்கள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளார்கள்.

இங்கு பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களை நிறுவமுடியாததால், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் இடம்பெயர் சேவைகளை இந்தப் பிரதேசத்தில் நடத்துமாறு கேட்டுக்கொள்கிறேன் எனவும், சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தார்.

# தனியார் பஸ் மரத்துடன் மோதி 34 பேர் படுகாயமடைந்தனர்!

கல்முனையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியாருக்குச் சொந்தமான பயணிகள் பஸ் வண்டியொன்று நேற்றுமுன்தினம் அதிகாலை 2.45 மணியளவில் குருநாகல் பஸ் டிப்போவுக்கு அருகாமையில் விபத்துக்குள்ளானதில் 34 பேர் படுகாயமடைந்தனர்.

இவர்களில் 4 பேர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு குருக்கள் மடத்தைச் சேர்ந்த ஐயப்பன் ரவல்ஸ் தனியார் வண்டியே விபத்துக்குள்ளானதென்றும், சாரதி நித்திரை தூங்கியதனாலேயே இந்த விபத்து நடந்ததாக அந்த பஸ்ஸில் பிரயாணம் செய்தவர்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு உடனடியாக விரைந்த பொலிஸார், பொதுமக்களின் உதவியுடன் காயமடைந்தவர்களை குருநாகல் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாகத் தெரியவருகிறது.



பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட திருட்டுப்போன சைக்கிள்கள் - உரியவர்கள் மீளப்பெறாமல் யாழ். பொலிஸ் நிலையத்தில் தேங்கிக்கிடப்பதைக் காணலாம்.




வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மனித உரிமைகள் தின நிகழ்வில் கலந்துகொண்டோரைப் படத்தில் காணலாம்.

# நந்தா கந்தசாமியின் 'புதியவெளி' கண்காட்சி நேற்றுமுன்தினம் ஆரம்பம்

நந்தா கந்தசாமியின் 'புதியவெளி' என்னும் கணிணி ஓவியக் கண்காட்சி நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து 3 நாட்களாக நடைபெற்று வருகின்றது. நாவலர் கலாசார மண்டபத்தில் - நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்தக் கண்காட்சி இன்றும், காலை 10.00 மணிமுதல் பிற்பகல் 8.00 வரை இடம்பெறவுள்ளது.

பெருமளவிலான ஓவியர்களும், பொதுமக்களும் இந்தக் கண்காட்சியை ஆர்வத்துடன் பார்வையிட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்க தாகும்.

இங்கு வர்ண அமைப்பில் உருவாக்கப்பட்ட மனித வாழ்வியல் அம்சங்கள் மற்றும் தமிழர்களின் வாழ்வியல் அவலங்கள் முதலிய கணிணி ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ப)

# கண்ணிவெடி அகற்றும் பணி 14 நாட்கள் இடைநிறுத்தம்

யாழ். மாவட்டத்தில் கண்ணி வெடி அகற்றும் செயற்பாடுகள் எதிர் வரும் 15 ஆம் திகதிவரை இடை நிறுத்தப்பட்டிருப்பதாக, யாழ். செயல கத்தில் இயங்கும் கண்ணிவெடிய கற்றல் செயற்பாட்டலுவலகம் தெரி வித்துள்ளது.

டெனிஸ் மிதி வெடியகற்றும் பிரி வினரும், ஹலோட்ரெஸ்ட் வெடி பொருள் அகற்றும் பிரிவினரும் இவ் வாறு தமது செயற்பாடுகளை 14 நாட்களுக்கு இடைநிறுத்தி வைக் கவுள்ளதாகத் தெரியவருகிறது.

இவர்களது பணிகள்யாவும் 29 ஆம் திகதி முதல், மீண்டும் வழமை போல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், அடுத்த ஆண்டுமுதல் மிகவும் சிறப் பான முறையில் செயற்படும்பொருட்டு மேலும பலர் இந்தச் சேவைக்கு இணைக்கப்படவிருப்பதாகவும், இந்த அந்த வட்டாரங்களில் மேலும் தெரி விக்கப்படடுள்ளது.

# யாழ். பிரதேச செயலகம் மீளவும் சொந்த இடத்தில்

யாழ். பிரதேச செயலகம் ஜன வரி மாதம் முதலாம் திகதிமுதல்- சொந்த இடத்தில் இயங்கவுள்ளதா கத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தகவலை பிரதேசசெயலகத்தின் திட்டமிடல் அதிகாரி ரி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கிவரும் யாழ்.பிரதேச செயல கம் எதிர்வரும் ஜனவரி மாதம் முத லாம் திகதி முதல் சொந்தக் கட்ட டத்தில் இயங்கவேண்டியுள்ளது. இதற்கான கட்டடபுனரமைப்பு வேலை கள் நடைபெற்றுவருகிறது.

யாழ்.கோட்டை வீதியிலேயே யாழ். பிரதேச செயலகத்திற்கான சொந்தக்கட்டடம் அமைக்கப்பட்டுள் ளது.

கட்டட அமைப்பு வேலைகள் பூர ணமாக முடிக்கப்படவில்லை. எனி னும் இந்த மாதம் 20 ஆம் திகதியு டன் தற்போது இயங்கும் கட்டடம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

ஆகவே ஜனவரி முதலாம் திகதி முதல் யாழ். பிரதேச செயலகம் சொந்தக் கட்டடத்தில் இயங்கவிருக் கின்றமையால் அந்த இடத்திற்கு மாற றப்படும் எனவும் மேலும் தெரிவித் தார். (ப)

# தொழிற் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை சண்டிலிப்பாய் பிரதேச செயலக மூடாக நடாத்தப்படவிருக்கும், மின் இணைப்பு, தச்சுவேலை, மேசன்வேலை, ஆகிய பயிற்சி நெறிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரியுள்ளது. விண்ணப்பதாரர் 8 ஆம் தரத்தில் சித்தியடைந்திருப்பதுடன், 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராயும் இருத்தல்வேண்டும். பயிற்சிவகுப்புக்கள் 6 மாத காலத்திற்கு நடாத்தப்படும். பயிற்சிக் காலத்தின் போது ஊக்குவிப்புப் பணமாக மாதாந்தம் 450 ரூபா வீதம் வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்பங்களை அனுப்ப விரும்புவோர் நாளைக்குள் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, தொழிற்பயிற்சி நிலையம், சண்டிலிப் பாய் பிரதேச செயலகம் முன்பாக, சண்டிலிப்பாய் • என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி வே.சிறீகுகன் கேட்டுள்ளார். (100,44)

# 1 லட்சத்து 10 ஆயிரம் ஆசிரியர்களுக்கு இந்த மாத இறுதிக்குள் பதவி உயர்வு!

(கொழும்பு)

கடந்த ஒக்ரோபர் மாதம் 08 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக ளுக்கு அமைவாக, இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு நாட்டில் உள்ள 1 லட்சத்து 10 ஆயிரம் ஆசி ரியர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் (06.10.1994 இல் இருந்து) அமுலில் இருந்து வந்த ஆசிரிய சேவைப் பிரமாணப் படி, ஒரு வகுப்பிலிருந்து அடுத்த வகுப்பிற்குச் செல்ல தொழில் மீளாய்வு சேவைக்கால பயிற்சி மற் றும் வினைத்திறமைகாண் தடைப்பரீ ட்சை ஆகிய புதியமுறையின் கீழ் நீக்கப்பட்டுள்ளன. எனினும், ஆசிரிய சேவையின் வகுப்பு ஒன்றுக்கு செல்வதற்கு, பரீட்சை உள்ளிட்ட நியதிதேவையெனக் கூறப்பட்டுள் ளது.

ஆயினும், வயதெல்லை இல்லை. கல்வி டிப்ளோமா பெற்றவர்களுக்கு ஒருதடவை வழங்கக்கூடிய வகை யில், ஒரு புள்ளி வழங்கப்படும் பயிற்சி அல்லது பட்டத்திற்கு முன் புள்ள காலத்திற்கு வருடத்திற்கு ஒருபுள்ளி வழங்கப்படும். இந்தப் புள்ளிவழங்கலின்போது, 06.10.1994 இற்கு முன்னுள்ள காலப்பகுதியும் கணக்கிடப்படும். 31.12.03 இற்குள் இந்தப் பதவியுயர்வுகள் வழங்கப் படவேண்டும் என வலியுறுத்தப்பட் டுள்ளது. (100)

## சின்னஞ்சிறு செய்திகள்

### வளர்ந்த மரங்களால் மின்தடை

(உடுவில்)

உடுவில் கிழக்குப் பகுதியிலுள்ள, அண்ணா சனசமூக நிலையத்துக்கு அண்மையாகவுள்ள வளர்ந்த மரங் களால், அப்பகுதிக்கு மின்தடை ஏற் படுவதாக, அந்தப் பகுதிமக்கள் தெரி வித்துள்ளனர்.

இந்தப் பகுதியிலுள்ள பெரிய மரங்கள் மின்னிணைப்புகளினூடாக ஊடுருவியிருப்பதால், பலத்த காற் றின்போதும், ஏனைய நேரங்களிலும் மின்தடை ஏற்படுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியிலுள்ள தடையை அகற்றுவதற்கு, சம்பந்தப்பட்டவர்க ளுக்குத் தெரியப்படுத்தியபோதும், இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளாததையிட்டு, அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள் ளனர். ,(கௌ)

### பாலர் பாடசாலை திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின ரால், புதிய பாலர் பாடசாலை யொன்று - எதிர்வரும் செவ்வாய்க்கி ழமை திறந்து வைக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வு மாநகரசபை ஆணை யாளர் இ.இராமலிங்கம் தலைமை யில், மாலை 2.00 மணிக்கு நடை பெறவுள்ளது. இதில், ஹேமாஸ் கம் பனி பிரதம நிறைவேற்று அதிகாரி ஹுசேய்ன் யூசுவ்அலி பிரதம விருந் தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக, பேராசிரி யர் சபா.ஜெயராஜாவும், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி.கிருஸ்ணசாமியும் கலந்துகொள் ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பாலர்பாடசாலை சிறுவர்களின் கலை நிகழ்வுகள், சிறுவர்கள் பங்கேற்கும் கிறிஸ்மஸ் விழா என்பன இடம்பெறவுள்ளன. மாநகரசபை ஆணையாளர் இ.இராம லிங்கம் புதிய பாலர்பாடசாலைக் கட்டடத்தைத் திறந்துவைக்கவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

### சமாதானக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பெண்கள் அபிவிருத்தி நிலை யத்தின் ஏற்பாட்டில், 'சமாதானத் தைக் கட்டியெழுப்புவதில் பெண்கள் ஈடுபடுதல்' என்னும் பொருள்பற்றிய கருத்தரங்கொன்று, எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரை யாடலில், பெண்கள் அமைப்புக்க ளைச் சேர்ந்தவர்கள் மற்றும் சமூக அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் முதலானோர் பங்குபற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

### மாணிக்கவாசகர் சிலை பிரதிஷ்டை

(உடுவில்)

எதிர்வரும் திருவெம்பாவையை முன்னிட்டு, உடுவில் ஸ்ரீ சிவஞான பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக மாணிக்கவாசகர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

சைவப் புலவரும், கல்விமானுமா கிய எம்.எஸ்.ஸ்ரீதயாளன் அன்பளிப் பாக இந்த மாணிக்கவாசகர் சிலையை அமைத்துக்கொடுத்துள் ளார். (101)

# தமிழ்மொழித் தினவிழா கொழும்பில் நடைபெறும்!

(கொழும்பு)

விபுலானந்த அடிகளாரின் சிரார்த்த தினத்தை முன்னிட்டு, அகில இலங்கை தமிழ் மொழித்தின விழா- இன்று காலை 9 மணிக்கு கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவின் பணிப்பாளர் ந.நடராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் - மனிதவள அபி விருத்தி, கல்வி பண்பாட்டலுவல் கள் அமைச்சர், கலாநிதி கருணா சேன கொடித்துவக்கு பிரதம விருந் தினராகவும், பாடசாலைகளின் கல்வி அமைச்சர் சுஜநிமல ராஜபக்ஷ சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்க வுள்ளனர்.

தேசியரீதியில் நடைபெற்ற போட் டியில் வெற்றிபெற்ற மாணவர்க ளுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள் ளன. (100)

# கள்ளமரம் தறித்தோரை அதிகாரிகள் பிடித்தனர்!

(யாழ்ப்பாணம்)

கள்ளமரம் தறித்தவர்கள் யாழ். செயலக அதிகாரிகளால் பிடிக்கப் பட்ட பின், விடுவிக்கப்பட்ட சம்பவம் ஒன்று - கடந்த சனிக்கிழமை இடம் பெற்றிருப்பதாகத் தெரியவருகிறது.

யாழ். செயலகத்திற்கு அருகில் உள்ள பழைய பூங்காப்பகுதியி லேயே, இந்த கள்ள மரங்கள் தறிக் கப்பட்டன.

நீண்ட நாட்களாக ஒரு சிலர் இந்தப் பகுதியில் கள்ளமரங்களை தறித்து வந்ததாகவும், யாழ். செய லக வட்டாரங்கள் இதனை அவதா னித்த பின்னர், அவர்களைக் கடந்த சனிக்கிழமை கையும் மெய்யுமாகப் பிடித்ததுடன், அவர்கள் வெட்டிய மரங்கள் மற்றும் அவற்றை ஏற்றப் பயன்பட்ட வண்டிகள் முதலியன கைப்பற்றப்பட்டன.

இந்த மரங்களை வெட்டியோர் எச்சரிக்கையின் பின்னர், அவர்கள் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (ப)

# காட்டுப்பன்றிகளின் அட்டகாசத்தினால் மட்டுவில்பகுதி மக்கள் அச்சம்!

(மட்டுவில்)

கட்டுக்கடங்காமல்திரியும் காட் டுப்பன்றிகளின் அட்டகாசத்தால் - மட் டுவில் வடக்கு, சரசாலை, கல்வயல் பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளார்கள். பகல் வேளைகளில் பற்றைகளுக்குள் பதுங்கியிருக்கும் பன்றிகள், இரவு நேரங்களில் கூட் டங்கூட்டமாகக் குடிமனைகளுக்கு வந்து பெரும் அட்டகாசம் செய்கின் றன.

நடப்பட்ட தென்னம்பிள்ளைக ளைப்பிடுங்கி, தேங்காயை உரித்து பூரான் உண்ணல், விழுந்து கிடக் கும் தேங்காயை உரித்து உடைத்து உண்ணல், பனம் நாற்று மேடை களை இடித்துத் தகர்த்தல் மற்றும் நெற்பயிர்களை அழித்தல் முதலான செயல்களில் இந்தப் பன்றிகள் ஈடுபடுகின்றன. இதனால், இரவு நேரங்களில் மக்கள் வீட்டுக்கு வெளியே வருவதற்கும பயந்துபோயுள் ளனர்.

பெருகிவரும் பன்றிகளின் பெருக் கத்தைக் கட்டுப்படுத்தி அழிக்காது விட்டால், பெரும் அழிவு ஏற்படு மென மக்கள் அச்சம் வெளியிட்டுள் ளனர். (24)

# பாடசாலை மாணவரிடையே பண்ணிசைப் போட்டிகள்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டு பேரவையின், திரு வாசகவிழாவை முன்னிட்டு, பாட சாலை மாணவர்களிடையே பண்ணி சைப்போட்டியொன்று நடத்தப்பட வுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள், தாங்கள் கல்விகற் கும் தரம், பாடசாலை, பிறந்த திகதி என்பனவற்றை - பாடசாலை அதிபர், பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன் தபால் மூலமோ அல்லது நேரிலோ ஒப்படைக்கமுடியும்.

பிரிவுகள் ஆண்டு 5 , 6 - சிவ புராணம், ஆண்டு 7, 8 - அச்சோப பதிகம், ஆண்டு 9, 10 - ஆனந்த மாலை ஆகிய விடயங்களில் பண் ணிசை, சமய அறிவு இரண்டும் பரீட்சிக்கப்பட்டே முடிவுகள் பெற ப்படும்.

போட்டிகள் யாவும் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆச்சிரமத்தில் நடைபெறும். வெற்றி பெறும் மாணவர்களுக்கு, தை மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிகழும் திருவாசக விழாவில் பணத் தொகையும், பரிசுகளும், சான்றிதழ் களும் வழங்கப்படவுள்ளது.

தொடர்புகொள்ளவேண்டிய முக வரி. திருவாசகப் போட்டிக்குழு, சந் நிதியான்ஆச்சிரமம், சைவகலை பண்பாட்டுப்பேரவை , செல்வச் சந் நிதி, தொண்டமனாறு. (17)

### மதுபோதை தடுப்புப்பிரிவு ஒன்றுகூடல்

கியூடெக் நிறுவன மதுபோதை தடுப்புப் பிரிவின் - வருடாந்த ஒன்று கூடல், இன்று கியூடெக் மண்டபத் தில் இடம்பெறவுள்ளது. மதுப்பழக் கத்திலிருந்து விடுபட்ட குடும்பத் தலைவர்களை உள்ளடக்கிய குடும் பங்களைச் சேர்ந்தவர்களுக்கான ஒன்றுகூடல் மூலம், குடும்ப ஐக்கி யத்தைப்பேணும் நோக்குடன் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் இயக் குநர் சி.ஜீ.ஜெயக்குமார் கருத்துரை வழங்கவுள்ளார். (91)

# விளையாட்டு அரங்கம்

## இளைய நிலா பொழிகிறது

மிக்கபலம் நிறைந்த கோலியாத்தை வீழ்த்திய டேவிட்டின் கதைதான் ஞாபகத்துக்கு வந்தது. அந்தக் காட்சியைத் தொலைக்காட்சியில் பார்த்தபோது, இரண்டாவது அவுஸ்திரேலிய - இந்திய டெஸ்ட்போட்டியில் 'புதியபுயல்' இர்பான் பத்தான் துடுப்பாட்ட ஜாம்பவான் மத்திய, ஹேடனின் விக்கெட்டை வீழ்த்தியதைத்தான் குறிப்பிடுகின்றோம். சாகீர் கான் விளையாடாதது. இர்பானுக்குச் சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறது. ஆனால், இர்பான் இந்திய அணிக்குள் வேகப் பந்து வீச்சாளர்' என்று நுழைவது, என்றோ தீர்மானிக்கப்பட்ட விடயம்.



முதன் முதலில் பதினைந்து வயதுச் சிறுவனை இனங்கண்டவர் இந்தியத்தேர்வாளர் கிரன் மோரேதான். ஜகீர்கானுடன் மாநிலஅணியில் விளையாடும் இர்பான், சாகீரின் கவனத்தையும் ஈர்த்திருக்கிறார். இந்திய 'A' அணியின் அங்கத்தவராக இங்கிலாந்து சென்றிருந்த இந்த இளைஞனின் திறமையைப்பற்றி, அணியின் பயிற்றுநர் றொபின்சிங் நிறையவே பேசுகிறார். இந்தவகையில் ACC சம்பியன்ஷிப் போட்டிகளுக்காக, இந்திய அணி வீரராக பாகிஸ்தான் சென்றபோது, இர்பானுக்கு சர்வதேசக்கதவுகளும் திறந்துகொண்டன. 19 வயதிற்குட்பட்டோருக்கான அந்த போட்டிகளில், (பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, பங்களாதேஷ்) அதிகூடிய விக்கெட்டுக்களாகப் பதினெட்டுவிக்கெட்டுக்களை இவர் சரித்தார். சிறப்பாக பங்களாதேஷுடனான போட்டியில், ஒன்பது விக்கெட்டுக்களைச் சரித்து சாதனை புரிந்தார். இர்பானை அவதானித்த இன்னொருவர் சுனில் கவாஸ்கர்

இவர் தன் கருத்தில் இன்னும் செழுமைப் படவேண்டிய பயிற்றுநர் இர்பான். ஆகவே, அவசரப்பட்டு, சர்வதேச கிரிக் கெட்டுக்களுக்குள் நுழைந்துவிடாதீர்கள் என்று, எச்சரிக்கிறார். பலசிறந்த இந்திய வேகப்பந்துவீச்சாளர்கள். அணிக்குள் வந்ததும், போனதும் தெரியாத அனுபவம் அவரின் மனதைத்தொட்டிருக்கவேண்டும் போலத்தோன்றுகிறது.

இர்பான் பத்தானின் பயிற்றுநர் இராகேஸ்பரிக் இவரை அறிந்திருப்பதைப்போல வேறுயாரும் அறிந்திருக்க முடியாது. அவர் கூறுகிறார் 'இவர் ஆற்றல் நிறைந்தவர் என்று எல்லோரும் கூறுவர். ஆனால், எவ்வாறு இந்த ஆற்றலை வளர்த்துக் கொண்டார் என்பது சிலருக்கே தெரியும். இவர் விக்கெட்டுக்கள் சரிப்பதை ஒரு பழக்கமாகவே கொண்டவர். ஆனால், அதற்காக நினைக்கமுடியாத அளவுக்குத் தன்னை வருத்திப் பயிற்சி செய்பவர். கடின உழைப்பு ஒன்றையே மூலதனமாகக் கொண்டவர்.' என்கிறார்.

### இர்பான் பத்தான் "பீனிக்ஸ் பறவை"

பயிற்றுநர் றொபின்சிங் இர்பான் பற்றிக்குறிப்பிடும்போது, இவரை ஒரு சகலதுறை ஆட்டக்காரராக வளர்த்தெடுப்பதற்கு முயற்சிக்கிறேன் என்கிறார். அந்த ஆற்றல் கொண்டவராக இவர் இனங்காணப்பட்டுள்ளார்.

இர்பான் உண்மையிலேயே கிரிக்கெட் துறைபற்றிப்பேசத் தகுதியுள்ளபலரால் இனங்காணப்பட்டுள்ளமையை நோக்கும்போது, சமமான நூற்றுக்கணக்கான இந்திய வேகப்பந்துவீச்சாளர்களுள், பல்வேறு சம்பவங்களில் முதன்மையானவராகவே இருக்கவேண்டும் என்பது நிருபணமாகிறது. ஆனால், இந்திய அணியில் அண்மைக்காலத்தில் வேகப்பந்துவீச்சாளர்கள் பலர் வந்துபோயுள்ளனர். அதற்குப் பலகாரணங்கள் இருக்கக்கூடும். இவ்வேளையில், இது தொடர்பில் உத்தரப்பிரதேசப் பந்துவீச்சாளர் ஆசிஸ்வின்ஸ்டன் ஜெய்டியின் ஒரு கருத்து முக்கியத்துவம் பெறுகிறது. ஜெய்டி 14 வருடங்களுக்குமுன் 19 வயதிற்குட்பட்ட அணியில் பாகிஸ்தானுக்கு எதிராக, 9 விக்கெட்டுக்கள் வீழ்த்தியவர். அவர் இந்திய அணிக்குள் நுழையமுடியாமற்போனமைக்கு, கிரிக்கெட்டுக்கு அப்பால் ஆதிக்கம் செலுத்திய காரணங்களே முதன்மை வகித்தன என்கிறார்கள் விமர்சகர்கள். அவர் கூறுகிறார் 'எதிர்பார்க்கைகள் நிரம்பவளரும் நேரம் இது ஆனால் இர்பான் இந்த மாதிரியான அழுத்தங்களுக்கு ஆளாகிவிடக்கூடாது. இந்த அழுத்தம் என்னை ரொம்பவும் பாதித்ததை நான் உணர்ந்தவன். இர்பான் சிறந்ததொரு பந்துவீச்சாளராகக் காணப்படுகிறார். அவர் எந்த அழுத்தத்திற்கும், பதகளிப்பிற்கும், ஆளாகிவிடக்கூடாது என்று, நான் பிரார்த்திக்கின்றேன்.'

இர்பான் பத்தான் பற்றிய இந்த எண்ணங்கள் சரியானவையே. ஆகவே இந்திய வேகப்பந்துவீச்சாளர்கள் பலர் அண்மைக்காலங்களில் பலியாகியதைப்போல, இவர் பலியாகிவிடக்கூடாது என்பது எல்லா கிரிக்கெட் ரசிகர்களதும் விருப்பம். இந்திய அணித் தேர்வாளர்களுக்கும் புரியவேண்டுமே!.

- சித்திரா.

## தன்னம்பிக்கைக்கு வழி

நடைபெற்று முடிவடைந்த இந்திய - அவுஸ்திரேலிய முதலாவது டெஸ்ட்போட்டி சமமாக முடிவடைந்திருக்கலாம். ஆனால், உளவியல் ரீதியாக இந்தியா மிகப்பலம் பெற்றுவிட்டதை மறுக்கமுடியாது. ஏனெனில், அவுஸ்ரேலிய அணியின் பலத்துடன் ஒப்பிடுகையில், இந்தியா பற்றிய சந்தேகம் எல்லாத்தரப்பிலுமே பலமாக இருந்தது. ஆனால், நடந்தது என்னவோ வேறுவகையாக அமைந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா இரண்டு விக்கெட் இழப்பிற்கு, இருநூறு ஓட்டங்களுக்கு அப்பால் நின்றபோது முதல் இன்னிங்ஸில் பாரிய இலக்கொன்றை இந்தியா எதிர்கொள்ளப்போகிறது என்று, ரசிகர்கள் எண்ணியிருப்பார்கள். ஆனால் மிகுதி இலக்குகள் 100 ஓட்டங்களுக்குள் சரியும் என்று யாருமே எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். அதற்கும் அடுத்து இந்திய அணி அநாயசமாக அவுஸ்திரேலியாவின் இலக்கைக்கடந்து நானூறுகளை எட்டுமென்றோ, சௌரவ்கங்குலி அற்புதமாக 144 ஓட்டங்கள் பெறுவார் என்றோ எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால், இவை எவ்வாறு நடந்தேறின. இதற்கு என்ன காரணம்? அவர்கள் சில மகுட வாக்கியங்களைத் தம்மகத்தே கொண்டு அவற்றின்படி விளையாடுவதுதான் காரணம் என்று இப்போது அறியமுடிகிறது.



### கங்கூலி "நல்லதொரு குடும்பம்"

2003 உலகக்கோப்பை போட்டிகளில் ஆரம்பக்கட்டத்தில் இந்தியத் தோல்விகள் இந்தியாவிலேயே பெரும் கோபாவேசத்தைக் கிளப்பின. ஆனால், அதன்பின் தொடர்ந்து எட்டு வெற்றிகளை பெற்று, இறுதி ஆட்டத்திற்கு இந்திய அணி தகுதி பெற்றது. தோல்விகளின் பின் தனித்துவிடப்பட்ட இந்திய அணி - இன்றில்லாவிட்டால் என்றும் இல்லை என்ற தாரகமந்திரத்தை மனதிற்கொண்டு, பெரும் வீச்சொன்றைக் காட்டினார்கள்.

அதேபாணியில்தான், தற்போது அவஸ்திரேலியாவிலும் இந்திய அணி செயற்படுகின்றது. அதாவது, இந்திய அணியின் உளவியல் ஆசான் சான்டி கோடன் போதித்த மநதிரம் "பின்னோக்கி ஒரு அடியும் வையாதே" என்ற வாசகத்தை இந்திய அணியினர் முற்றும் ஏற்றுக்கொண்டு செயற்பட்டதாக இந்திய அணியினர் கூறுகின்றனர். இந்த வகையான இன்னும் நான்கு வாக்கியங்களை இந்திய அணியினர் கொண்டிருப்பதாகவும், இவை அவுஸ்திரேலிய சுற்றுப்போட்டியில் பயன்படுத்தப்படும் என்று கூறுகின்றார்கள். இதில் மூன்றை அடுத்த, மூன்று டெஸ்ட் போட்டிகளுக்குமான காலத்தில் பயன்படுத்தப்படும் என்றும், இறுதி வாசகம் சிம்பாப்வே - அவுஸ்திரேலிய - இந்திய முத்தரப்பு ஒருநாள் போட்டிகளின்போது பயன்படுத்தப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

2001 - 2002 டெஸ்ட் தொடரின்போது, அண்மைக்காலத்தில் அவுஸ்திரேலியாவை தோற்கடித்த ஒரேயொரு நாடு இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது. அதன்பின் 2003 இல் உலகக்கிண்ணப் போட்டிகள். ஆனால் அண்மையில் நடந்தேறிய நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை வெற்றி பெற இந்தியாவால் முடியாமற்போயிற்று.

அவுஸ்திரேலியாவிற்கு, இந்திய அணி செல்லுமுன்னாலேயே பல அதிருப்திகளுக்கு உள்ளானது. அங்குசென்று விக்ரோறியா அணிக்கு எதிராகவும், குயின்ஸ்லாந்து அணிக்கு எதிராகவும் தரம் தாழ்ந்து விளையாடியபோது, ஊடகத்துறையும் இந்திய ரசிகர்களாலும், இந்திய அணியும், கங்குலியும் கடுமையாக விமர்சிக்கப்பட்டார்கள். இந்தச் சந்தர்பத்தில் தான, அணி முகாமைத்துவக்குழு ஒரு முடிவை எடுத்தது. அதன்படி உளவியல் ரீதியான அணுகுமுறைகளுக்காக சான்டி கோடனும், வேகப்பந்து வீச்சுப் பயிற்சியாளராக புரூஸ்ரீட்டும் நியமிக்கப்பட்டார்கள். அது நல்ல பலன் அளித்திருக்கிறது என்பது தெரிகிறது. குறிப்பாக சௌரவ் கங்கூலி போன்ற விட்டுக்கொடுக்காத, சளைக்காத அணித்தலைவர் ஒருவர் தான் அவுஸ்திரேலியாவின் திறமையை மேவவும் முடியும். மமதையை அடக்கவும் முடியும்.

- ரோஜா.

## ஓடி ஓடி உழைக்கணும்

பல்வேறுதரப்புகளும் நீண்டதூர ஓட்டப் பந்தயங்கள் நடைபெறும்போது, சர்வசாதாரணமாக மரதன் ஓட்டப்போட்டி என்ற சொற்களுடன் அதனை இனங்காட்டுவது வழக்கமாகப்போய்விட்டது. உண்மையில் நெடுந்தூர அல்லது நீண்டதூர ஓட்டங்கள் எல்லாம், மரதன் ஓட்டங்கள் அல்ல. கி.மு. 490 இல் பாரசீகர் மீதான கிரேக்கரின் வெற்றியை அறிவிக்க, ஓர் போர் வீரன் மரதனில் இருந்து ஏதென்ஸ்வரை ஓடிச் சென்றான். வெற்றிச் செய்தியை அறிவித்த அவன், களைப்பு மிகுதியால் வீழ்ந்து இறந்தும்விட்டான். அவன் ஓடி முடிந்த தூரம் 26 மைல்கள், 385 யார்கள் (42.7 கிலோமீற்றர்) இந்தத் தூரத்தைக்கடப்பதே மரதன் ஓட்டம் என்று பெருமையாகப் பேசப்படுகிறது.



### மார்கிரட் - மாட்டின் "கென்யப் புயல்கள்"

இத்தகைய சரியான தூரத்தைக்கொண்ட மரதன் ஓட்டப்போட்டி, அமெரிக்காவில் வெரசானோ (ஸ்ரட்டன் தீவு) வில் இருந்து சென்ரல் பாக் (மன்ஹட்டன்) வரை நடைபெற்று முடிவடைந்தது.

இந்த மரதன் ஓட்டப் போட்டியில் பங்கு கொண்ட வீரர்களின் எண்ணிக்கை 35,000 பேர், ஆண்கள், பெண்கள் மற்றும் சக்கர நாற்காலி வீரர்கள் இந்தப் போட்டியில், முதல் இருபது இடங்கள் பெற்றவர்களின் பதினொருபேர் கென்ய நாட்டைச் சேர்ந்தவர்கள். இதிலொன்றும் ஆச்சரியம் இல்லை. நெடுந்தூரம் என்றால் கென்யா என்பது எல்லோரும் அறிந்ததொன்று. சிறப்பாக நியூயோர்க் மரதன் போட்டியில் ஆண்கள் வரிசையில் முதலிடம் பெற்றவர் மாட்டின் லெல் - கென்யா (2மணி, 10. நிமிடம், 30. செக்கன்) மகளிர் வரிசையில் முதலிடம் பெற்றவர் - மார்கிரட் ஒகாயோ - கென்யா - (2மணி, 22. நிமிடம், 31. செக்கன்), ஆண்கள் வரிசையில் முதல் நான்கு இடங்களும், மகளிர் வரிசையில் முதல் இரண்டு இடங்களும் கென்யர்களால் வெற்றி கொள்ளப்பட்டிருக்கின்றன. இதில் இன்னொரு குறிப்பு என்னவென்றால், லெல் தனது சாதனை நேரத்தைவிட, சிறிது அதிகமாகவே எடுத்திருந்தாலும் ஓட்டத் தடச்சாதனையை 2 நிமிடத்தால் முறியடித்திருக்கிறார். எனவே, இவருக்குப் பரிசுகள் பல காத்திருந்தன. மரதன் ஓட்டப்போட்டியில், முதல் இடம்பெற்றமைக்கு 100,000 அமெரிக்க டொலர்கள், தட நேரக்குறைப்புச் சாதனைக்கு 8000 அமெரிக்க டொலர்கள், 14,000 அமெரிக்க டொலர்கள், பெறுமதியான சொகுசுகக்கார். இன்னொரு செய்தி, இரண்டாவதாக வந்த றொஜர்ஸ் றொப் இவரது நெருங்கிய நண்பர். கென்யாவில் ஒன்றாகவே பயிற்சிகளில் ஈடுபட்டவர்கள். அவரும் சில நீண்டதூர ஓட்டங்களில் வெற்றி பெற்றிருப்பவர் என்றாலும் நாற்பது செக்கன்கள் வித்தியாசம் மேற்சொன்ன பரிசுகளையெல்லாம் றொப்பிடம் இருந்து பறித்து லெல் இடம் கொடுத்துவிட்டது.

- காயத்ரி -

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# அவரா செய்தார்?

உலகின் அதிசிறந்த கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் வரிசையில் வைத்து பேசப்படுபவர்கள், அவர்களுள் ஒருவர் ஜமெய்க்காத் தீவைச்சேர்ந்த (மே.இந்தியத்தீவுகள்) ஸ்ரீவ்பக்னா. இவரை வீரர்கள் தமது மைதான ஆர்ப்பாட்டங்கள்மூலம் அசைப்பதென்பது நடக்க முடியாததொன்று. அழகிய புன்னகையில் எல்லாவற்றையுமே அடக்கிவிடுவார். மறுபுறம் உலகின் தலைசிறந்த துடுப்பாட்டவீரர் சச்சின் டென்டுல்கார். இங்கு இருவரையும் பற்றி எழுதுவது பக்னரைக் குறைகூறுவதற்கல்ல. சச்சினின் துரதிஸ்டம் பற்றிமட்டும் குறிப்பிடவேயாகும்.



அவுஸ்ரேலியாவிற்கு எதிரான முதலாவது டெஸ்டில், மூன்றுபந்துகளை மட்டும் சச்சின் எதிர்கொண்டு LBW முறையில் ஆட்டமிழந்தபோது, அவர் தனது பதினோராவது டெஸ்ட் பூச்சியத்தைப் பெற்றவரானார். ஜேசன் ஜிலெஸ்பி வீசிய பந்து, கால் காபபுக்களில் பட்டபோதுதான் கேள்வி எழுப்பியது உண்மைதான் என்றும், ஆனால் தான் மீண்டும் அடுத்த பந்துவீச்சுக்கான ஆரம்ப இடத்துக்கு மெதுவாக நடந்துகொண்டிருந்தபோது, சச்சின் அவுட்டென்று ஸ்ரீவ்பக்னர் சைகைசெய்தமை எனக்கு ஆச்சரியமாக இருந்தது என்கின்றார். இதன பினனர் அவதானிக்கப்பட்ட இன்னொருவிடயம் என்னவெனில், ஜேசன் ஜிலெஸ்பிவீசிய அந்தப்பந்து NOBALL என்பதாகும்.

தெரிந்தோ தெரியாமலோ அவுஸ்ரேலியா மண்ணில் முன்னரும் இப்படியாக சச்சின் பாதிக்கப்பட்டிருக்கிறார், என்கிறார் முன்னாள் இந்திய அணியின் வீரர் மற்றும்தலைவர், தற்போது கிரிக்கெட் விமர்சகர் ரவி சாஸ்திரி.1999-2000 ஆண்டுத்தொடரின்போது, அடிலெயிட மைதானத்திலும், சிட்னி மைதானத்திலும் சச்சின் பாதிக்கப்பட்டார். அந்தத்தொடரில் ஏறத்தாள ஐந்து தடவை சச்சின் நடுவர்களின் முடிவால் பாதிக்கப்பட்டிருந்தார். இருந்தும், அவரது துடுப்பாட்டச்சராசரி 50க்கு மேல் இருந்தது என்கிறார். உலகின் சிறந்த வீரராக சச்சின் தெரிவுசெய்யப்படும் நிலையில் இந்த விடயம் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கும் என்கிறார். மேலும், சச்சின் கால்காப்புக்களில் பட்டபந்து, நிச்சயம் வக்கட்டுகளுக்கு மேலாகத்தான் சென்றிருக்கும் என்று இப்பொழுது நிச்சயமான நிலையில், அந்தக்கணத்தில் அதை உணர்ந்த சச்சின் ஒருமெல்லிய ஆச்சரியத்தை முகத்தில் பரவவிட்டாரேதவிர, எவ்விதக் கசப்பும் இன்றிக் கனவானாக மைதானத்தை விட்டுவெளியேறிவிட்டார். பக்னர் அவுட் கொடுத்த விடயத்தை விட, சச்சின் அதன்பின் மைதானத்தில் நடந்து கொண்டமுறைதான் எல்லோராலும் பெரிதாக வியந்து பாராட்டப்படுகிறது. இதனால்தான் இவர் உலகின் தலைசிறந்த கிரிக்கெட் வீரராகப் போற்றப்படுகிறார் போலத்தெரிகின்றது.

இந்த டெஸ்ட்போட்டியில் அவுஸ்ரேலியவீரர் - ஜஸ்ரின் லாங்கரும் LBW முறையில் அவுட்டானவர். அதோடு தொடர்புபடுத்தி ஜஸ்ரின் லாங்கர் பேசுகிறார். தனது அவுட்பொறுத்து நான் மிகவும் பொறுமையிழந்தேன். ஆனால், சச்சினின் நிலை எனக்கேற்பட்டிருந்தால் நான் என்ன செய்திருப்பேன் என்று என்னால் கூறமுடியவில்லை. சிலவேளை நான் தீவிரமாக இருந்திருக்கக்கூடும் என்கிறார். ஜஸ்ரின் லாங்கர்.

# இருக்காது



சச்சின் இந்த விடயத்தில் இளம் தலைமுறை வீரர்களுக்கு ஒருநல்ல முன்மாதிரியாகவே திகழ்ந்தார். இதனால்தானோ என்னவோ சச்சின் உலகப்புகழ்பெற்றவராக இருக்கிறார் என்கிறார் லாங்கர்.

முதலாவது டெஸ்ட் பொறுத்து பக்னர் நான்கு பிழையான LBW முடிவுகளை எடுத்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. மூன்று இந்தியாவுக்கு எதிராக அவுட் இல்லையென்று கொடுத்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.இரண்டு சந்தர்ப்பங்கள் சகீர்கானின் பந்து வீச்சின்போது ஏற்பட்டவை. அதில் ஒரு சந்தர்ப்பத்தில் லாங்கர் பிடிகொடுக்கிறார். ஆனால் அந்தப் பந்து வீச்சு NO BALL என்று பக்னரால் நிராகரிக்கப்படுகிறது. பின்னர் RE PLAY இல் அந்தப் பந்துவீச்சு NOBALL அல்ல என்று தெரிவிக்கப்பட்டது. இதேபோல ஆகாஷ் சோப்ராவின் OUT ஒன்று OUT இல்லை என்று இவரால் தீர்மானிக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டுகிறார்கள். நடுவரின் பணி மிகவும் கடுமையானது என்பது எல்லோரும் அறிந்ததே. அதுவும் ஸ்ரீவ் பக்னர் போன்ற நடுவர்கள் பிழைவிடுவார்கள் என்பதை எந்தக் கிரிக்கெட் ரசிகரும் நம்பத்தயாராக இல்லை.அது மட்டுமல்ல பக்னர் பட்சபாதமாக நடக்கும் ஒரு நடுவர் என்று இதுவரை யாருமே கருதியதும் இல்லை. இனியும் கருதமாட்டார்கள். ஆனால் இப்படியான எதிர்பாராத முடிவுகள், தனிப்பட்ட வீரர்களின் திறமையைப் பாதிப்பதாகவும், அணிக்குப் பெரும் பாதகத்தையும் ஏற்படுத்துவதாகவும் அமைந்துவிடும் என்பது உண்மை. சச்சினுக்கு தனது சாதனைப்பட்டியலை விரைவில் நிரப்ப, இந்தச் சந்தர்ப்பம் தடையாக அமைந்துவிட்டது என்பது உண்மைதான். என்றாலும், அவரது கௌரவத்தை மென்மேலும் அதிகரிக்கும் ஒரு சம்பவமாகவும் அமைந்துவிட்டது. - சரண்யன்.

# போதுமடா சாமி

ஸ்ரீவ்வோ தற்போது நடைபெறும் இந்திய - அவுஸ்ரேலிய டெஸ்ட்தொடருடன் ஓய்வு பெறப்போகிறார். இது தொடர்பில் ஏற்பட்டுள்ள உணர்வலைகள் பலவகை. அதில் அவுஸ்திரேலிய முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் கிரெகெப்பலின் கருத்து வித்தியாசமானதாக அமைந்துள்ளது. ஸ்ரீவ்வோ இளைப்பாறப்போகிறார் என்ற செய்தி பெரிதும் மிகைப்படுத்தப்படுவதால் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தகைமை தளம்பல் நிலைக்குச் சென்றுகொண்டிருக்கிறது என்பது இவரின் கருத்து.



ஸ்ரீவ்வோ - மனைவி லினெட்
"அகதிகளுக்கு அருள்வோன்"

ஸ்ரீவ்வோவின் அர்த்தமற்ற முதல் இனிங்ஸ் விளையாட்டே இந்திய அணியின் கை ஓங்கக் காரணமாக இருந்தது என்பது இவரது வாதம். ஸ்ரீவ்வோ நான்கு பந்துகளைச் சந்தித்து பூச்சியத்துடன் ஆட்டம் இழந்தது மட்டுமன்றி, டேமியன் மாட்டின் ரண் அவுட் ஆகவும் காரணம் ஆகினார். இது ஒரு அபத்தம் எனும் செப்பல், இதுவே ஏழு விக்கட்டுக்களை அறுபத்தொரு ஓட்டங்களுக்குள் இழக்க காரணம் என்கிறார். மேலும் ஸ்ரீவ்வோ அற்பத்தனமாக அவுட்டாகி பவிலியன் நோக்கி வரும்போது, ரசிகர்கள் ஆரவாரமாக வரவேற்றிருக்கிறார்கள். ஆனால் அற்புதமான சதம் போட்ட லாங்கர் கண்டு கொள்ளாமலே விடப்பட்டார் என்கிறார் அவர். தான் ஓய்வு பெறப்போகிறோம் என்ற ஓர் பதகளிப்பில் விளையாடிய ஸ்ரீவ்வோ தடுமாற்றமான ஒரு நிலமையையே வெளிப்படுத்தினார் என்கிறார். இது ஒரு தனிநபர் முழு அணியுமே வீழ்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்வதாக அமைகிறது என்பது புல னாகிறது என்கிறார்.

இதனை ஏதோ ஒரு வகையில் அவுஸ்ரேலிய அணியின் பயிற்றுநர் ஜோன்புக்கானனும் ஏற்றுக்கொள்கின்றார். ஸ்ரீவ்வோவின் ஓய்வுபெறும் செய்தியானது, உலகசாம்பியன் அணியை சிறிது தளர்வுறச் செய்யும்போலத்தான் இருக்கிறது என்பவர், இது அணிமேற்கொள்ளும் சந்திப்பில்கூட கலந்துரையாடத்தக்க விடயம்தான் என்கிறார்.

இங்கு இருவருமே நாகரிகம் கருதி, அடக்கமாகப் பேசினாலும், ஸ்ரீவ்வோ இல்லாவிட்டால் அணியே இல்லை என்பது போன்ற பாவனை உருவாகுவதுபோல் இருக்கிறது என்ற எண்ணம் அபத்தமானது என்ற வகையிலேயே, இவர்களின் கருத்து அமைகிறது. புக்கானனைவிட கிரெக் செப்பல் கடுமையாகவே இருக்கிறார். இந்தத் தொடர் அவுஸ்ரேலிய அணிக்கான தொடர் என்பதைவிட "ஸ்ரீவ்வோ கண்காட்சி" போலவே இருக்கிறது என்கிறார் அவர். இறுதியாக செப்பல் முடிக்கும்போது சுற்றுப்பயணம் மோசமாகவே ஆரம்பித்துள்ளது. அவா உடனடியாகவே ஏதாவது செய்தாகவேண்டும். தனது கண்காட் சியாக அன்றி அணியின் நலன்கருதிச் செயற்படவேண்டும்.என்றும் கூறயுள்ளார்.கிரெக் செப்பல் எப்பொழுதும் வெளிப்படையாகவே கருத்துக்களைக் கூறுபவர்.இதனால் விளையாடும் காலத்திலேயே சர்ச்சைக்கு உள்ளாகுபவர். ஒரு பரந்துபட்ட நோக்கில் பார்க்கும்போது செப்பலின் கருத்துக்களில் உண்மையில்லை என்றும் ஒதுக்கிவிடமுடியாது. - மக்டலின்.

# செய்து காட்டிய சிங்கங்கள்

அனைவரதும் பலத்த எதிர்பார்ப்புக்கும் மத்தியில் ஆரம்பமான - இந்தியாவிற்கும் அவுஸ்ரேலியாவிற்கும் இடையிலான கிரிக்கெட்போட்டி அவுஸ்ரேலியாவின் பிரிஸ்பேர்னில் நடைபெற்று முடிவடைந்தது.

கிரிக்கெட் ராஜ்ஜியத்தில் எவராலும் அடக்கமுடியாத சிங்கமாக விளங்கும் அவுஸ்ரேலிய அணி சென்ற இடமெல்லாம் வெற்றியுடன் திரும்பியது. அத்தகைய அணியை அதன் சொந்த மண்ணில் எதிர்க்கச செல்லும் இந்திய அணி என்ன சாதிக்கப்போகிறதோ என்ற கலக்கம் கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்டது. ஆனால், சாதித்துக் காட்டியது இந்திய அணி.



ஸ்ரீவ்வோ தலைமையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி முதல் நாளிலே தன் திறமையைக் காட்டியது. ஜஸ்ரின் லாங்கர் முன்னரே சதம் அடிப்பேன் என்று கூறியதுபோல சதம் அடித்தார். அணியின் துணைத்தலைவர் ரிக்கிபொண்டிங் அரைச்சதம் பெற்றார். முதல் டெஸ்ட் போட்டியன முதல்நாள் நிறைவில் 262 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்திருந்தது. இரண்டாம் நாள் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர்களான ஷகீர்கான், அகர்கர் ஆகியோர் முன்பு அவுஸ்ரேலிய அணி திணறியது. 262 ஓட்டங்களுக்கு 2 விக்கெட் இழப்பு என்றநிலையில் தொடங்கிய அவுஸ்ரேலிய அணி 323 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களை இழந்தது. ஷகீர்கான் 5 விக்கெட்டுக்களைப் கைப்பற்றினார். அடுத்து மூன்றாம் நாள் ஆட்டத்தின் முதல் பந்திலேயே தன் இறுதி விக்கெட்டையும் இழந்து, 323 ரன்களுக்குள் அவுஸ்ரேலியா கட்டுப்பட்டது.

மூன்றாம் நாள் ஆட்டமுடிவில் இந்திய அணி 11 ஓட்டங்களைப் பெற்றநிலையில், விக்கெட் இழப்பின்றி இருந்து நான்காம் நாள் ஆட்டம் ஆரம்பித்தபின் 61 ஓட்டங்களைப் பெற்றபோது ஷேவாக் ஆட்டமிழந்தார். 62 ஆவது ஓட்டத்தில் மாஸ்டர் பிளாஸ்டர் சச்சின் டெண்டுல்கர் ஆட்டமிழந்தார்.



சௌரவ் கங்கூலி
"எங்கும் நிறைந்தவன்"

இந்திய அணி துவழப்போகிறது என்று நினைக்க, களமிறங்கிய இந்திய கப்டன் " கொல்கத்தா இளவரசர் "சௌரவ் கங்கூலி, வி.வி.எஸ் லக்ஸ்மன ஆகியோரின் இணைப்பாட்டத்தால், இந்திய அணி நிமிர்ந்தது. இருவரும் சேர்ந்து அவுஸ்ரேலிய பந்துவீச்சாளர்களை பந்தாடத் தொடங்கினார்கள். 73 பந்துகளில் லக்ஸ்மன் தன் அரைச்சதத்தைப் பூர்த்திசெய்தார். தொடர்ந்து கங்குலியும் 73 பந்துகளில் அரைச்சதத்தைப் பெற்றார்.

ஆனால், லக்ஸ்மன் 113 பந்துகளில் 11 பவுண்டறிகள் உட்பட 75 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டமிழந்தார். அப்போது இந்திய அணி 273 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்திருந்தது. பின்னர் தொடர்ந்து அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்களை பதம்பார்த்த வீரர். 17 வயதான பார்த்திவ் பட்டேல். சௌரவ் 135 பந்துகளில் தன் 11ஆவது டெஸ்ட் சதத்தையும், அவுஸ்ரேலியாவிற்கு எதிரான முதல் சதத்தையும் பெற்றார்.

5 ஆம் நாள் இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 409 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் அவுஸ்ரேலிய அணி தன் இரண்டாவது இன்னிங்ஸில், இந்திய பந்து வீச்சாளர்களை நோக்கி 283 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு பெற்றுக் கொண்டது. ஆனால் அதில் ரசிகர் மனதைத் தாக்கிய ஒரு விடயம் மத்தியூ ஹேய்டன் 99 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது தான். ஆனாலும் அவர் தொடர்ந்து 3 ஆண்டுகள் 1000 ஓட்டங்களுக்குமேல் பெற்ற வீரர் என்ற சாதனையை நிலைநாட்டினார். அத்துடன், அவுஸ்ரேலிய அணி தன் ஆட்டத்தை நிறுத்தி இந்திய அணிக்கு 23 ஓவர்களில் 199 ஓட்டங்கள் என்ற இலக்கை நிர்ணயித்தது.

அடுத்து துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணி 4 ஓட்டங்களுக்கு முதல் இரு விக்கெட்டுக்களையும் இழந்து திண்டாடிய நிலையில் சோடி சேர்ந்த ராவிட், லக்ஸ்மன் ஆகியோர் தலா 43 ஓட்டங்கள், 24 ஓட்டங்களைப் பெற்றனர். அத்துடன் இரு அணித்தலைவர்களும் இணங்கியதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இந்தப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக சௌரவ் கங்குலி தெரிவுசெய்யப்பட்டார். இரண்டாவது போட்டி 12 ஆம் திகதி அடெலைட்டில் தொடங்கி நடந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து ஏனைய டெஸ்ட்போட்டிகளும் முடிய, முத்தரப்பு போட்டி ஆரம்பமாகவுள்ளது. இதில் இந்தியா, அவுஸ்ரேலியா, சிம்பாப்வே ஆகிய நாடுகள் மோதவுள்ளன.

### போட்டி விபரம்

| | |
|---|---|
| பிரிஸ்பேர்ன் முதல் டெஸ்ட் | டிசம் 04 - 08 |
| அடெலைட் இரண்டாவது டெஸ்ட் | டிசம் 12 - 16 |
| மெல்பேர்ன் மூன்றாவது டெஸ்ட் | டிசம் 26 - 30 |
| சிட்னி நான்காவது டெஸ்ட் | ஜன 2 - 6 |
| முத்தரப்பு ஒருநாள்போட்டிகள் | |
| 09.01.04 | அவுஸ். எதிர் இந்தி. |
| 11.01.04 | அவுஸ். எதிர் சிம். |
| 14.01.04 | சிம். எதிர் இந்தி. |
| 16.01.04 | அவுஸ். எதிர் சிம். |
| 18.01.04 | அவுஸ். எதிர் இந்தி. |
| 20.01.04 | சிம். எதிர் இந்தி. |
| 22.01.04 | அவுஸ். எதிர் இந்தி. |
| 24.01.04 | சிம். எதிர் இந்தி. |
| 26.01.04 | அவுஸ். எதிர் சிம். |
| 29.01.04 | அவுஸ். எதிர் சிம். |
| 01.02.04 | அவுஸ். எதிர் இந்தி. |
| 03.02.04 | சிம். எதிர் இந்தி. |
| 06.02.04 | முதல் இறுதிப்போட்டி. |
| 08.02.04 | இரண்டாம் ,, |
| 10.02.04 | மூன்றாம் ,, |

- மாயவன் -

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

வாரநோக்கு

# மக்களின் எதிர்ப்புணர்வின் எழுச்சியும் அது வெளிப்படுத்தும் செய்தியும்

கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் பல முக்கிய சம்பவங்கள் நடந்தேறியிருக்கின்றன. அனைத்துச் சம்பவங்களிலும் பிரதானமாக இடம்பிடித்திப்பது, மக்களின் உணர்வலைகள் தான். அதாவது, அரச பாதுகாப்பு



மற்றும் நிர்வாக இயந்திரங்களுக்கு எதிரான தமது எதிர்ப்பை - மக்கள் வெவ்வேறு முறைகளிலே வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

முதலாவது விடயமாக முக்கியம் பெறுவது - இதுவரை காலமும் யாழ. மாவட்ட இராணுவத்தளபதியாகவிருந்து, இராணுவத் தொண்டர் படைத தளபதியாக இடமாற்றம் பெற்றுச்செல்லும் மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா - யாழ்.மாவட்ட அரச அதிகாரிகளை இறுதியாகச் சந்தித்து, விடைபெறுவதற்கான பிரியாவிடை நிகழ்வொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமையாகும்.



512 ஆவது படைத்தளம் அமைந்துள்ள உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசமான, சுபாஸ்ஹோட்டலிலேயே இந்தச் சந்திப்பு நடைபெற ஏற்பாடாகியிருந்தது. நேரத்துடனேயே குடாநாட்டு இராணுவத்தளபதி சரத் பொன்சேகா வந்து காத்திருந்த போதும், குறிப்பிடததக்களவில் அரச அதிகாரிகள் எவரும் அவரை சந்திக்க அங்கு செல்லவில்லை. ஓரிரண்டு அதிகாரிகள் கலந்துகொண்டதாக இராணுவத் தரப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சந்திப்புக்கு - அரச அதிகாரிகள் சமுகமளிக்காமைக்கு, பல்வேறு காரணங்கள் இருக்கலாம். ஒன்று - பொது இடமொன்றிலே இச்சந்திப்பை ஒழுங்குசெய்யாது, சுற்றிவர இராணுவ காவலரண்களும், முட்கம்பிவேலிகளும் சூழ்ந்துள்ள ஒரு அடிமைத்தளத்தின் சின்னத்திற்குள் ஒழுங்கு செய்திருந்தமையாக இருக்கலாம். அரச அதிகாரிகள் இவ்வாறானதொரு இடத்திற்கு சென்று, சரத் பொன்சேகாவை சந்திக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லாமலும் இருந்திருக்கலாம். இந்த இடத்திலே இன்னொரு முக்கியமான விடயமும் குடாநாட்டு அரச அதிகாரிகள் மட்டத்தில் பரவலாகப் பேசப்பட்டது. அதாவது, இதுவரைகாலமும் வவுனியா மாவட்ட இராணுவத் தளபதியாக கடமையாற்றி, தற்போது யாழ்மாவட்ட இராணுவத்தளபதியாக மாற்றப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சந்திரபால- வவுனியாமாவட்டத்திலிருந்து விடைபெறும்போது, விடுதலைப்புலிகளுடைய வவுனியா மாவட்ட அரசியற்துறை அலுவலகத்திற்கு நேரடியாகச்சென்று விடை பெற்றுக்கொண்டார். அதனைச் சமாதானத்தின் மீது பற்றுறுதி கொண்ட விடுதலைப் புலிகளும் வரவேற்றனர். வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் - புலிச்சின்னம் பொறித்த நினைவுப்பரிசொன்றையும் மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவுக்கு வழங்கியிருந்தார்.

இது சாதாரண பத்திரிகைச் செய்தியாகப் பார்க்கக் கூடியதல்ல. சிறிலங்காவின் இராணுவ வரலாற்றிலே ஏற்பட்ட முக்கியமான ஒரு நிகழ்வாக பதியப்படவேண்டியது.

வவுனியாவில் நிலைமை இவ்வாறு இருக்க, யாழ்ப்பாணத்திலோ சரத் பொன்சேகா சம்பிரதாயபூர்வத்தையே மாற்றும்படியாக நடந்துகொண்டார். ஒருவரிடமிருந்து நாம் விடை பெறப்போகிறோம் எனின், அவரை நாம்தாம் தேடிச்செல்லவேண்டும். இதுதான் வழமை. இதனை விடுத்து, மாறுபாடாக நடந்துகொள்ள முயன்ற சரத்பொன்சேகாவை அதிகாரிகள் சந்திக்க விரும்பாமல் இருந்திருக்கலாம். இதைவிட சரத்பொன்சேகா யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்த போது, நடந்த பல சம்பவங்களும்- யாழ்ப்பாண மக்களின் மனங்களில் ஆழமாகப் பதிந்துள்ளது.

ஊடகவியளார்கள் தாக்கப்பட்டமை, மக்கள் மீது இராணுவம் மற்றும் பொலிஸார் தமது அடாவடித்தனங்களை, போர் நிறுத்த காலத்திலும் பிரயோகித்தமை - நீதி, நியாயம் கேட்டு எழுந்த மக்களின் குரலை, குரல்வளைகளை நசித்து அடக்க முயன்றமை, மாவீரர் தினக்கொண்டாட்ட நிகழ்வுகளை காட்டுமிராண்டித்தனமான முறையிலேயே குழப்பியமை, எல்லாவற்றுக்கும் மேலாக உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான விடயங்களில் அதிகம் இறுக்கமாக நடந்துகொண்டமையும், இறுக்கமான கருத்துக்களை வெளிப்படுத்தியமை எனப் பல நினைவுகள் யாழ். மகளின் மனங்களில் அகலாமல் இருக்கலாம்.

இதனால்கூட குறித்த சந்திப்பை அதிகாரிகள் பகிஷ்கரிக்க சந்தர்ப்பம் உண்டு.

இந்த நிகழ்வு - சரத் பொன்சேகாவிற்கு மட்டுமல்ல, இனி யாழ். மாவட்ட தளபதியாக வரப்போகும் சுசில் சந்திரபாலவுக்கும் நல்லதொரு அனுபவம். அவர்களுக்கு மட்டுமன்றி கீழ்மட்ட அதிகாரிகள், மேல்மட்ட அதிகாரிகள் அனைவருக்கும் நல்லதொரு பாடமாக அமைந்திருக்கும் என்பது ஐயமில்லை.

இவ்வாறானதொரு சந்திப்பை வடமராட்சி மீனவர் சங்கப் பிரநிதிகளும் பகிஷ்கரித்துள்ளனர். வடமராட்சியிலுள்ள இறங்குதுறைகள் பல வற்றில், வான்வெட்டுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்தாலோசிப்பதற்காகவும், வடமராட்சி மீனவர் சமாசத்தினை இராணுவ அதிகாரிகள் அழைத்திருந்தனர். ஆனால், இந்த அழைப்பை மீனவர்கள் நிராகரித்தனர்.

கூப்பிட்டுக் கூப்பிட்டு கதைப்பதும், பின் எடுக்கப்பட்ட முடிவிற்கு மாறாக நடப்பதும் தான் இதுவரை நாம் கண்டபலன். எனவே, இனிவரும் காலங்களில் இவ்வாறான சந்திப்புககளை தாம் பரிசீலிக்கப் போவதாக மீனவர்கள் அறிவித்துள்ளனர். இது ஆரோக்கியமான மாற்றம் இதனால் படைத்தரப்பு ஓரளவு அசைந்திருக்கிறது.



இந்தச் சம்பவம் நடைபெற்ற பிற்பாடு பொலிகண்டிப்பிரதேசத்திலுள்ள வான் ஒன்றை ஆழமாக்கும் முயற்சியிலே படையினர் ஈடுபட்டனர். இது மீவர்களை சமாதானப்படுத்தும் ஒரு நிகழ்வாகவே மீனவர்கள் பார்த்தனர். எனவே கடந்த வாரம் குடாநாட்டில் இராணுவ அதிகரிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட இரு முக்கிய சந்திப்புக்கள் பிசுபிசுத்துப்போய்விட்டன.

இவை எல்லாவற்றையும்விட, பத்திரிகை விற்றுக்கொண்டிருந்த இளைஞர் ஒருவரை படையினர் சுட முயன்று, அது தவறுதலாக தனியார் பஸ்சேவை நடத்துனர் ஒருவரை காயத்துக்குள்ளாக்கிய சம்பவம் யாழ். பஸ்நிலையப்பகுதியிலே இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் கூட இராணுவத்தினரின் மிலேச்சத்தனமான மனவுணர்வுகளை மற்றும் போர் நிறுத்தத்தை குழப்புவதிலே உள்ள தீவிரமுனைப்பை வெளிப்படுத்தியுள்ளது.

சாதாரண ஒரு பத்திரிகையை விற்பனை செய்வதற்கே உரிமை மறுக்கப்படும் ஒரு "ஜனநாயக" நாட்டிலே ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட இனம் எவ்வாறு தனது உரிமைகளை சமாதான வழியிலே பெற முடியுமென எதிர்பார்ப்பது? மேற்படி சம்பவம் நடைபெற்ற பின்னரும் மக்கள் தமது எதிர்ப்பைக்காட்டியுள்ளார்கள்.

துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்ட இராணுவத்தினரை பொலிஸாரின் ஜீப்பிலிருந்து வீழ்த்தி தாக்கமுயன்றனர். அதனைத்தடுக்க பொலிஸார் வான்நோக்கி வேட்டுக்களை தீர்த்தனர். இங்கும் மக்கள் இராணுவ அடககுமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்தமையானது குறிப்பிடத்தக்கது.

குடாநாட்டிலே இவ்வாறான சம்பவங்கள இரண்டுமாத காலப்பகுதிக்குள் பல நடந்துள்ளன. இந்தச் சம்பவங்களில் மக்கள் நடந்துகொண்ட விதம் தொடர்பாக, எதிர்க்கருத்தை வெளிப்படுத்துபவர்களும் உள்ளார்கள். அவர்கள் - மக்கள் தமது கைகளிலே சட்டத்தை எடுத்துக்கொண்டதாகக் குற்றஞ்சாட்டுகிறார்கள். ஆனால், அதன் பின்னணியை அவர்கள் உணரமறுக்கிறார்கள்.

ஆட்சி அதிகாரத்தின் சட்ட திட்டங்களும், நீதிநடைமுறைகளும் நம்பிக்கையற்று, வெறுப்புற்றதனாலேயே மக்கள் தமது பாதுகாப்புக்காகவே சட்டத்தை தமது கைகளில் எடுக்கத்துணிகிறார்கள். குற்றவாளிகளுக்கு, அதுவும் குறிப்பாக இராணுவத்தரப்பு சம்மந்தப்பட்ட வழக்கு விசாரணைகளிலே - உரிய நீதியான, நேர்மையான தீர்ப்பை வழங்காது, வழுக்கிச் செல்வது இலங்கையில படுகொலை வழமையாகிவிட்டது.

பத்திரிகையாளர் நிமலராஜன் கொலை தொடக்கம் - கிருசாந்தியின் பாலியல் வல்லுறவுக்கொலை இப்படித்தான் அனைத்தும் நடந்துள்ளது.

அவர்களோடு சம்மந்தப்பட்ட சூத்திரதாரிகள் - இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை. இவ்வாறான நம்பிக்கையீனங்களினாலேயே மக்கள் சட்டத்தை தமது கைகளில் எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இவற்றோடு இன்னொரு சம்பவம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுள்ளது. 1995 ஆம் ஆண்டுக்கு பின்னர் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கமும், அன்னையர் முன்னணியும் இணைந்து, மனித உரிமைகள் தினமான கடந்த 10ஆம் திகதி, யாழ் .மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாக எதிர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

எட்டு வருடங்களுக்கு மேலாகியும் படையினரால் கைதுசெய்யப்

**யாழவன்**

பட்ட தமது உறவுகள் தொடர்பாக தெளிவாக எந்த முடிவும்பெற்று தராமையைக் கண்டித்தே இவர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக ஆராயவதற்காக அரசினால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவிடம் இருந்து இவர்களுக்கு ஒரு கடிதம் வந்துள்ளது. அந்தக் கடிதத்தில் தங்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, தங்கள் உறவினரைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டோம். ஆனால், கண்டறிய முடியவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவை அறிவிப்பதற்கு, ஒரு ஆணைக்குழு தேவையா? அதற்கு ஒரு செயற்குழு தேவையா? ஆணைக்குழு தெரிவித்துள்ள முடிவைத்தானே எட்டு வருடங்களுக்கு முன்பே கணவனை இழந்த பெண்களும், பிள்ளைகளை இழந்த பெற்றோரும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

தமது உறவுகள் காணாமற்போய்விட்டதாக கேட்டு அவர்களுக்குப் பின் என்ன நடந்தது என்பதை அறிந்து சொல்லுங்கள் எனக் கேட்ட போது, அறிவிக்கப்பட்ட முடிவு இதுதானா? எல்லாம் தமிழனின் தலைவிதி.

இவ்வாறு கடந்த இரு வாரங்களிலும் முக்கியமான பல சம்பவங்கள் - யாழ். மாவட்டத்திலே நடந்துள்ளன. இந்தச் சம்பவங்கள் அனைத்துமே பொதுவாக மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தாலும், அந்த உணர்வுகள் வெளிப்படுத்திய செய்திகள்- ஆட்சிப்பீடங்களை சென்றடையுமா என்பது கேள்விக்குறியான விடயமே? ◆

# சுயத்தை இழந்த வெளிநாட்டு வாழ்வின் உள்ளத்து உணர்வுகளே என் ஓவியங்கள்

## ஓவியக் கலைஞர் நந்தா கந்தசாமி தெரிவிப்பு

புலம்பெயர் வாழ்க்கையில் - சுயத்தை நாம் இழந்துநின்றபோது, உள்ளத்தில் எழுந்த உணர்வுகளே என் ஓவியங்களாக வெளிப்பட்டுள்



ளன என ஓவியர் நந்தா கந்தசாமி தெரிவித்துள்ளார்.

நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று ஆரம்பமான அவரது கணினி ஓவியக்கண்காட்சி குறித்து, நமது ஈழநாட்டிற்கு அவர் அளித்த செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு தெரிவித்ததாவது -

ஓவியத்தை நான் கற்கவில்லை. ஓவியவகுப்பிலிருந்து கற்றேன் என்று கூடக்கூறமுடியாது. ஆனாலும் என் உள்ளத்தில் எழுந்த உணர்வுகள் மற்றும் ஆசைகளின் வெளிப்பாடாகவே ஓவியத்தை வரையத் தொடங்கினேன். அவை காலவோட்டத்தில் என்னை ஓவியனாக்கிவிட்டது.

எனது ஓவியங்களுக்குப் பார்வையாளர்கள் விளக்கம் கொடுப்பதையே நான் விரும்புகின்றேன். ஏனெனில், நான் ஓர் விளக்கத்தையோ அல்லது தலைப்பையோ கொடுப்பேனானால், அந்த வரையறைக்குள் நின்றுகொண்டே பார்வையாளர்கள் ஓவியங்களைப் பார்ப்பர்.

இது மற்றவரின் எண்ண ஓட்டத்தினைக் கட்டுப்படுத்துவதாக அமைந்துவிடும். ஓவியத்தைப்பார்ப்பவர்கள் ஓவியத்துடன் பேசவேண்டும் என்பதே எனது விருப்பம்.

கோட்டோவியங்களை வரையத் தொடங்கிய நான் - பின்னர் பல்வேறு ஓவியங்களையும் கற்பனையில் வரைந்து, இன்று கணினி கொண்டு ஓவியம் வடிக்கும் வழியை எமது சந்ததிக்கு காட்டிவைக்கின்றேன். இதுவே "புதிய வெளி"என்ற பெயரிலான எனது ஓவியக்கண் காட்சியாகும். இன்று நான் வசிக்கும் கனடா தேசத்தில் இந்த ஓவியங்களுக்கு தனித்துவமான இடம் உண்டு.

நான் இங்கிருந்து 1985 ஆம் ஆண்டு கனடாவிற்கு புலம்பெயர்ந்து சென்றிருந்தேன். எனினும், எனது தாய நாட்டின் மீதான பெறுமதியும், அருமையும் அங்கு சென்றபின்தான் எனக்குத் தெரிந்தது.

எனதுநாட்டின்மீதான பற்றினால் எனது ஓவியங்களில் பெரும்பாலானவை தாய்நாட்டு அவலங்களை வெளிப்படுத்தும் வகையில் அமைத்துள்ளேன்.

வெளிநாட்டு வாழ்வென்பது, எமது அபயத்தை இழந்து கெளரவமற்ற தன்மையில் வாழ்வதையே காட்டுகின்றது. அந்த வாழ்க்கையில் எமது உறவுகள் அங்கு பெரும் அவலததை அனுபவிக்கின்றனர்.

அந்த வாழ்க்கையில் என் உள்ளத்தில் எழுந்த உணர்வுகளைச் சித்திரிப்பதாகவும் ஓவியங்களை அமைத்துள்ளேன்.

எனது உறவுகளின் இருப்பிடம் இந்த நாடு. எனது பிறந்த நாடு இது என்னிலிருந்து இந்த உறவை எப்போதும் பிரித்து விடமுடியாது என்பதை, எனது ஓவியங்களும் உள்ளத்துணர்வுகளும் வெளிப்படுத்துகின்றன.

வெளிநாட்டு வசதிகள் சுயகெளரவத்தைத் தந்துவிடாது. இயந்திர வாழ்க்கையின் மத்தியில், ஓவியத்தினூடாக எனது உணர்வினை வெளிப்படுத்துவதற்கு, எனது தேசத்தின் அவலமும் பிரதான காரணம்.

எனினும், நான் ஒரு ஓவியன் எனக்கூறிக்கொள்ளும் அளவிற்கு தகுதி ஏற்படவில்லை என்றே நான் கருதுகிறேன் என அவர் அங்கு தெரிவித்தமையானது - அவருள்ளான காலத்தேடலின் ஆளுமையுடன் கூடிய அடக்கத்தை வெளிப்படுத்துவதாகவே உணரமுடிந்தது. (ப)

# வேறுபாடுகளை களைந்தெறியும் பாலங்களை கட்டியெழுப்புவோம்...



தொண்டமானாறு பாலம் வல்வெட்டித்துறைக்கு அருகில் யாழ்ப்பாண மாவட்டம்



"யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய தேவைகளை அறிந்து அவற்றைச் செய்வதில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோதே என்னாலான முயற்சிகளை மேற்கொண்டேன்."

"இன்று புனருத்தாரண மீள்குடியேற்றல் மற்றும் அகதிகள் விவகார அமைச்சர் என்ற வகையில் வட - கிழக்கை மீள்கட்டியெழுப்பும் நோக்கில் இரவு, பகல் பாராமல் நடவடிக்கை எடுத்துவருகிறேன், பிரதமரின் வழிகாட்டலில் உள்நாட்டு அகதிகளை மீள்குடியேற்றும் பணியை மேற்கொண்டுவருகிறேன்."

**பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன**
**புனருத்தாரண, மீள்குடியேற்றல் மற்றும் அகதிகள் விவகார அமைச்சு**

யுத்தத்தால் அகதியான மக்களை மீள்குடியேற்றல் மற்றும் அழிந்துபோயுள்ள வீதிகள் மற்றும் பாலங்கள் அடங்கலான கீழ்கட்டமைப்பு வசதிகளை மீள்கட்டியெழுப்ப பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையிலான அரசு மிகுந்த அக்கறையுடன் நடவடிக்கை எடுத்து வருகிறது.

வட மாகாணத்தில் காணப்படும் பாலங்கள் மற்றும் **A,B** தர பாதைகளை புனரமைக்கும் விஷேட வேலைத்திட்டங்கள் பிரதமர் அவர்களின் வழிநடத்தலுடன் புனருத்தாரண, மீள் குடியேற்றல் மற்றும் அகதிகள் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யுத்தத்தால் அழிந்து போயுள்ள வடமாகாணத்தை கட்டியெழுப்பும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் விஷேட திட்டத்தின் கீழ் வீதிகள், பாலங்கள் அடங்கலான கீழ் கட்டமைப்பு வசதிகளை புனரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் **A-9** புனரமைப்புப் பணிகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. **A,B** தரப் பாதைகளிலான 89 பாலங்கள் பழுதடைந்துள்ள அதேவேளை, அடுத்த மூன்று வருட காலப்பகுதிக்குள் அவற்றை பழுதுபார்க்கும் அல்லது புனரமைக்கும் பணிகள் நிறைவு செய்யப்படும். இந்த திட்டம் பிரித்தானிய அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும். இதற்கு இலகு கடன் அடிப்படையில் பிரித்தானிய அரசு 20 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்களை (3 பில்லியன் இலங்கை ரூபாய்) வழங்குகிறது.

மேற்படி 89 பாலங்களில் அடுத்த மாதத்தில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட 13 பாலங்கள் இனங்காணப்பட்டுள்ள அதேவேளை, அப்பணிகளுக்கு தேவையான கட்டுமாணப் பொருட்கள் ஏற்கனவே கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளன.

| மாகாணம் | மாவட்டம் | வீதி | பாலத்தின் பெயர் | அகலம் |
|---|---|---|---|---|
| வடக்கு | யாழ்ப்பாணம் | A9 | நாவற்குழி | 83.46 |
| வடக்கு | யாழ்ப்பாணம் | A9 | கைதடி | 139.49 |
| வடக்கு | யாழ்ப்பாணம் | AB 32 | பட்டர்பிளை | 61.54 |
| வடக்கு | யாழ்ப்பாணம் | B 68 | புலோலி - வரணி | 15.24 |
| வடக்கு | மன்னார் | A32 | வேளங்குளம் - தள்ளடி | 55.47 |
| வடக்கு | மன்னார் | A32 | வேளங்குளம் - தள்ளடி | 30.48 |
| வடக்கு | மன்னார் | A32 | வேளங்குளம் - தள்ளடி | 27.43 |
| வடக்கு | மன்னார் | A32 | வேளங்குளம் - தள்ளடி | 30.48 |
| வடக்கு | கிளிநொச்சி | A35 | பரந்தன் - முல்லைத்தீவு | 15.24 |
| வடக்கு | கிளிநொச்சி | A35 | பரந்தன் - முல்லைத்தீவு | 15.24 |
| வடக்கு | கிளிநொச்சி | A35 | பரந்தன் - முல்லைத்தீவு | 46.3 |
| வடக்கு | கிளிநொச்சி | A35 | பரந்தன் - முல்லைத்தீவு | 12.19 |
| வடக்கு | கிளிநொச்சி | A35 | பரந்தன் - முல்லைத்தீவு | 24.39 |

அழிந்துபோயுள்ள பாதைகள், பாலங்கள் சமூகத்தின் உறவுகள் மத்தியில் பிளவை ஏற்படுத்தவல்லது. வேறுபாடுகளை களைந்தெறியும், பாலங்களை கட்டி யெழுப்புவோம்.

(சி-1887) புனருத்தாரண மீள்குடியேற்றல் மற்றும் அகதிகள் விவகார அமைச்சு, 4 ஆம் மாடி, 14, சேர் பாரோன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு1.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக்கெடும்.

-திருக்குறள்.

## நமது நோக்கு

### தொலைக்காட்சியுள் தொலையும் காலங்கள்

இந்த நூற்றாண்டில் வெகுசனத் தொடர்பூடகங்களை எவர் தமது ஆளுகைக்குள் பெருமளவிற்கு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார்களோ, அவரே உலகின் மீதான மேலாதிக்கத்தை தம்வசம் வைத்துக்கொண்டவர்களாக இருப்பர் என்பது சர்வதேச மதிப்பீடுகளின்மூலம் அறியப் பட்ட ஒன்றாகும்.

இன்றைய நாட்களில் தொடர்பூடகங்கள் வெகுஜனங்களூடாக தமது ஊடுருவல்களை நவீன இலத்திரனியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பாரியளவில் மேற்கொண்டுவருகின்றன.

அறிவியல் துறையில் இலத்திரனியலின் பயன்பாடென்பது நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே போகின்றது. தொடர்பூடகத் துறையில் அதன் பயன்பாடென்பது- வியத்தகு சாதனைகளை உலகளாவிய ரீதியில் எட்டிவரும் நிலையில், தமிழ் வெகுசனத் தொடர்பூடகத் துறையானது இந்த அறிவியல், அற்புதமான தொழில்நுட்பத்தினை வெறுமனே பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கே பெருமளவில் பயன்படுத்தப்படுவதானது வருத்திற்குரிய விடயமாகும்.

பொழுதுபோக்கு என்பதைக்கூட இந்த வெகுசனத் தொடர்பூடகங்கள் வெறும் வர்த்தக நோக்குடனேயே அணுகிவருவதுதான் தமிழ்மக்களுக்கு பேராபத்தினை ஏற்படுத்திவரும் ஒன்றாகும். குறிப்பாக, தொலைக்காட்சி சாதனம் இன்றைய உலகில் ஒரு அத்தியாவசியம் என்பது எவராலும் நிராகரிக்கமுடியாத ஒன்றென்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. உலகின் இயக்கத்தை, மானுடத்தின் வரலாற்று நிகழ்வை, அறிவியலின் எழுச்சியை, திசைகள் உமிழ்ந்துகொண்டிருக்கும் செய்திகளை, தகவல்களை கண்முன்னால் கணப்பொழுதிற்குள் நாம் இருக்கும் வீட்டின் வரவேற்பறைக்கே கொண்டுவந்து காட்சிகளாக நிறுத்தும் அற்புத சாதனம் அதுவாகும்.

அந்த சாதனத்தை தமிழ்த் தொலைக்காட்சி நிலையங்கள் எவ்வாறு பயன்பட வைக்கின்றன என்பதுதான் இன்றைய பிரச்சினைக்குரிய கேள்வியாகும்.

இப்போது பெருமளவுக்கு தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் பலவும் தொலைநோக்கு - சமூகப் பார்வை கொண்ட வகையில் எமது மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைக் கருத்திற்கொள்ளாது - வெறும் வர்த்தகத்தை இலக்காகக் கொண்டதும், மக்களின் சிந்தனைகளை, ஆரோக்கியமான, தேசத்தின், சமூகத்தின் நலன்களை அக்கறையுடன் அணுகச்செய்யும் மனவளர்ச்சிக்கு இட்டுச்செல்லாததுமான தமிழ் நிகழ்ச்சிகளையே பொழுதுபோக்கு என்ற வகையில் 24 மணிநேரமும் ஒளிபரப்பி வருகின்றன.

தொலைக்காட்சி நிலையங்களுக்கு வருமானமே முக்கிய இலக்காகவுள்ளது.

வருமானத்திற்கு வர்த்தக நிலையங்களின் விளம்பரங்கள் முக்கியம்.

விளம்பரங்களை வழங்கும் அனுசரணையாளர்கள் தத்தம் விருப்பத்திற்கு ஏற்பவே நிகழ்ச்சிகளை பொழுதுபோக்கு அம்சங்களுடன் தயாரிக்க நிர்ப்பந்திக்கிறார்கள்.

தரம்குறைந்த தமிழ்சினிமாவின் ஆதிக்கமே தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை மொத்தமாக குத்தகைக்கு எடுத்திருப்பதானது - தமிழ்மக்களின் நேரத்தை பெருமளவுக்குக் கொல்வதுடன், ஆரோக்கியமற்ற மட்டமான கலாரசனையை விதைத்து, தமிழ்க் கலை கலாசாரத்தின் மேன்மைகளையும் கொச்சைப்படுத்தக் காரணமாகியும் உள்ளது.

தமிழ்வானொலி நிகழ்ச்சிகளில்கூட தமிழ்த்திரைப் படங்களின் மூன்றாந்தர இசைப்பாடல்களின் அலறல்கள் இடைவிடாது ஒலிக்கின்றன.

24 மணிநேர ஒலி - ஒளி நிகழ்ச்சிகளின் வர்த்தகத் தன்மையானது, எமது மக்களின் வாழ்வியக்கத்தின் இயல்பை பெருமளவுக்கு பல்வேறு வகையிலும் பாதித்து வருவதை பொறுப்புள்ள சமூகம் இதய வலியுடன் அவதானித்துவருகின்றபோதிலும், அதற்கு மாற்றாக - அல்லது இந்தக் காலத்தை கொல்லும் ஊடக ஊடுருவலை முறியடிக்க வழிதெரியாது தவிக்கவும் செய்கின்றன.

தமிழர்களைப் பொறுத்தவரையில் தொலைக்காட்சி- தொல்லைக்காட்சியாக விஸ்வரூபம் எடுத்துவரத் தொடங்கிவிட்டது.

காலை எழுந்தவுடன் காலைக்கடன்களை முடிக்க முன்னரே தொலைக்காட்சியைத் திறக்க வேகங்கொள்ளும் கைகளே இன்று அதிகம்.

இது தமிழ்மக்களின் குடும்பத்தின் - சமூகத்தில் ஏற்படுத்தும் குழப்பங்களை, தாக்கங்களை, கலாசார சீரழிவுகளைத் தொடர்ந்தும் அனுமதிப்பது ஆபத்தான எதிர்காலமொன்றுக்கே வழிவகுக்கும்.

இது ஒருவிதமான உளவியல் பிறழ்வுகளை ஏற்படுத்தும் தன்மை கொண்ட திட்டமிட்ட ஊடுருவல் என்பதை உணரத்தவறின், நாம் பரிதாபத்திற்குரிய இனமாகிவிடுவோம்.

சில நிகழ்வுகள் முக்கியமான அம்சங்களைக் கொண்டவையாக உள்ளன என்பதில் சந்தேகமில்லை.

சேற்றுக்குள் சில பழங்கள் கிடக்கிறது என்பதற்காக சேற்றையே முழுமையாக பருகலாமா?

## நாடும் நடப்பும்




செய்தி:- விடுதலைப் புலிகளின் திட்டவரைபினை ஜனாதிபதியும் பிரதமரும் நுணுகி ஆராய்ந்து வருகிறார்கள்.

# குப்பை கூழங்களைப் பாவித்து பசளை தயாரிப்பதற்கு திட்டம்!

(யாழ்ப்பாணம்)

மாநகர சபையினரால் அகற்றப்படும் குப்பை கூழங்களை பாவித்து, இயற்கைப் பசளையை தயாரிக்கும் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கென தொழிற்சாலை ஒன்றையும், நவீன தொழிநுட்ப வசதிகளுடன் யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்த்துகை அமைச்சு மூலமாக மேற்கொள்ளப்படவுள்ள "நோராட்" திட்டத்தின் கீழேயே கழிவுகளை இயற்கைப் பசளையாக மாற்றும் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தற்பொழுது மாநகரசபையால் ஒரு நாளில் 20 தொன் குப்பைகள் நகரப்பகுதிகளில் இருந்து அகற்றப்பட்டுவருகிறது. எதிர்காலத்தில் இது 40 தொன்னாக அதிகரிக்கும் வாய்ப்புகள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

தற்பொழுது அகற்றப்படும் குப்பை கூழங்கள் - காக்கை தீவு, அரியாலை, நாவாந்துறை ஆகிய பகுதிகளிலேயே பெருமளவு கொட்டப்பட்டு வருகின்றது. இதனால் அந்தப் பகுதிகளில் சுகாதார சீர்கேடுகளும், தொற்றுநோய்களும் பரவும் வாய்ப்புகளும் அதிகரித்து வருகின்றன.

இவற்றைத் தவிர்க்கும் நோக்குடனேயே திண்மக் கழிவுகளை கொம்போஸ்ட் உரமாக மாற்றும் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. இந்த விடயம் தொடர்பாக அந்தத்துறை சார்ந்த நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று ஆய்வுகளில் ஈடுபட்டு வருகினறது. இந்தக் குழுவினர் தமது ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்த பின்னர், இந்த விடயம் தொடர்பாக ஆராயப்பட்டு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோதமாக 51 பேர் இத்தாலிக்கு சென்றனர்!

### குற்றத்தடுப்புப் பணியகம் தெரிவிப்பு

சிலாபம் கடற்பகுதியில் இருந்து 51 பேர் சட்டவிரோதமாக இத்தாலிக்குச் சென்றுள்ளதாக, இலங்கையின் குற்றத் தடுப்பு பணியகம் - சர்வதேச பொலிஸ் மற்றும் கெய்ரோ நகரப் பொலிஸ் ஆகியவற்றுக்கு தகவல் வழங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

மேற்படி 51 பேரையும் கைதுசெய்வதற்கு தாங்கள் நடவடிக்கை எடுத்தபோதும், அவர்கள் இலங்கையின் கடல் எல்லையைத் தாண்டிச் சென்றுவிட்டதால், அது முடியாமற் போய்விட்டதாகவும் குற்றத்தடுப்புப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் இத்தாலி செல்ல முயன்றவர்களில் இதுவரை 800 இற்கு மேற்பட்ட இலங்கையரும், வெளிநாட்டவர்களும் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கண்ணிவெடிகள் காரணமாக உப்பாறு திருத்தவேலை தடங்கல்

(யாழ்ப்பாணம்)

கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளமையினால், உப்பாறு தொடர்பான திருத்தவேலைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. யாழ்.குடாநாட்டின் நீர்வளத்தை பாதுகாப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுத் திட்டத்தின்மூலம், உப்பாறு தொடர்பான வேலைகள் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டுமென கண்டறியப்பட்டுள்ளது.

ஆனால், இந்தத் திட்டத்தை மேற்கொள்ளவதற்கு கண்ணிவெடிகள், மிதிவெடிகள் என்பன புதைக்கப்பட்டுள்ளமை இடையூறாக உள்ளதாக கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. அரியாலைப் பகுதியில் கடலுடன் தொடர்புபடும் இந்த உப்பாறுப் பகுதி மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளமையால் கடல்நீர் உட்புகும் அபாயமுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தடுப்பதற்கு அரியாலைப்பகுதியில் தடுப்புச் சுவரொன்று அமைக்கப்படவேண்டியது அவசியமென வலியுறுத்தப்பட்டுள்ளது. இதற்குரிய நிதியை நோராட் வழங்க முன்வந்தபோதும், மிதிவெடிகள் அகற்றப்படாத காரணத்தினால் இதற்குரிய நிதி வேறு வேலைத்திட்டத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மாணவர்களிடையே கட்டுரைப் போட்டிகள்

பாடசாலை மாணவர்களிடையே சூழல் அபிவிருத்தி நீர்வளப் பாதுகாப்பு என்பன தொடர்பாக கட்டுரைப் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது. இப்போட்டி - புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியமர்த்துகை அமைச்சு மூலமாக மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோராட் திட்டத்தின் மூலம், குடாநாட்டில் முன்னெடுக்கப்படவுள்ள கழிவகற்றல், சூழல் முகாமைத்துவம், நீர்வள பாதுகாப்பு என்பன தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் ஒரு படியாகவே - பாடசாலை மாணவர்களிடையே மேற்படி விடயம் தொடர்பாக கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளது. இது தொடர்பாக கல்வியமைச்சு ஊடாக கல்வித் திணைக்களங்களுடன் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியமர்த்துகை அமைச்சின் மேலதிக செயலாளர் க.சண்முகலிங்கம் தெரிவித்தார். (ச)

# மாநகரசபை எல்லைக்குட்பட்ட குளங்கள் நோராட் திட்டத்தின் கீழ் புனரமைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன. நோராட் திட்டத்தின் மூலமாகவே இந்தக் குளங்களின் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தத் திட்டம் மூலமாக மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள 35 குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

குளங்கள் அனைத்தும் தூர்வாரப்பட்டு, சேறு அள்ளப்பட்டு ஆழமாக்கப்படவுள்ளது. குளங்களைச் சுற்றி தடுப்பணைகளும் அமைக்கப்படவுள்ளன. குளங்களை மழைநீர் சென்றடையும் வடிகால்கள், வாய்க்கால்களும் தகுந்த முறையிலே செப்பனிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, மாநகரசபை எல்லைக்குட்பட்ட குளங்களில் அநேகமானவை தூர்ந்துபோயும், சேறுமண்டியும் உள்ளன. மக்கள் குளங்களில் - குப்பை கூழங்களை கொட்டிவருவதால் குளங்களின் நீர் கொள்ளளவுத்திறன் குறைந்துவருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற போர் நடவடிக்கை காரணமாகவும், விவசாய நடவடிக்கைகளில் - செயற்கை உரங்கள் பாவனைகள் அதிகரித்து வருவதாலும் குடாநாட்டு நீர் வளத்தில் நைத்திரேற்றின் அளவு அதிகரித்துள்ளமை ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஆரியகுளம், புளியங்குளம் நரிக்குளம் போன்ற பல குளங்கள் மோசமாக பாதிப்படைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நடக்கப்போவது பொதுத்தேர்தலா? அல்லது மாகாணசபைத் தேர்தலா?

## தெற்குத் திசையினிலே...

**கொழும்பிலிருந்து இந்திரஜித்**

சமாதானத்தை எதிர்பார்க்கும் நாட்டு மக்கள் - ஒவ்வொருநாளும் ஏதோ ஒரு மாற்றத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.



ஆனால், ஒவ்வொருநாளும் முடிவடையும் போது, மக்கள் முகங்களில் மலர்ச்சியில்லை. கடந்த இரண்டு வருடங்களாக, நாட்டில் அமுலிலிருக்கும் போர்நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையில், சமாதான சகவாழ்வு ஏற்பட்டிருந்தது. மக்கள் பிரச்சினைகளின்றி, சுதந்திரமாக நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்றுவரக்கூடியதாக இருந்தது.

20 வருடகாலப் போர் இடம்பெற்ற நாடு என்ற வடு - மக்கள் மனதில் சிறிது சிறிதாக மறையத் தொடங்கி, மீண்டும் போர் ஒன்று இடம்பெறாது என்ற நம்பிக்கை மக்கள் மனதில் குடிகொண்டிருந்தது. இந்தவேளையில், தான் முன்னர் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு என, தமிழ் மக்களால் எதிர்பார்க்கப்பட்ட ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க - சமாதானத்தை முன்னெடுத்துச் சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திலிருந்த, மூன்று முக்கிய அமைச்சுக்களைத் தமது பொறுப்பில் கொண்டுவந்தார். நன்கு திட்டமிட்ட இந்த நடவடிக்கையின் பின்னர், ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் தமது வலுவை இழக்கும் என ஜனாதிபதி எதிர்பார்த்தார்.

மாற்று நடவடிக்கையாக மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து, மாற்று அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தலாம் என்பதே ஜனாதிபதியின் எண்ணமாக இருந்தது. அதேநேரம், ஐக்கிய தேசிய கட்சியின் ஒரு பிரிவு - நாடாளுமன்ற உறுப்பினர்களை தங்களின் வசப்படுத்தி, தேசிய நல்லிணக்க அரசு என்ற திட்டத்தை மக்கள் முன்வைக்கலாம் எனவும் ஜனாதிபதி நினைத்தார். அவர் மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றபோது, இவை யாவும் உடனடியாக நடந்துவிடப் போகிறது என்றே அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால், நாட்கள் நகர நகர ஜனாதிபதியின் எண்ணமும், ஜனாதிபதியின்மீது மக்கள் கொண்டிருந்த அதிரடி எதிர்பார்ப்புகளும் கனவுகளாக மாறின.

சிங்கள கடும்போக்கு அரசியலை முன்னெடுத்து, சிங்கள மக்கள் மனதை வென்று, அதன்மூலம் இலங்கையின் அடுத்த ஆட்சியைக் கைப்பற்றுவதே ஜனாதிபதியினதும், அவருடன் இணைந்து கூட்டுச்சேர முயலும் மக்கள் விடுதலை முன்னணியினதும் திட்டமாக இருந்தது. இதற்காகவே, இந்த இரண்டு தரப்பினரும், சமாதான முன்னெடுப்புக்களை காரசாரமாக விமர்சிக்கும் பணிகளில் ஈடுபட்டு வந்தனர்.

ஜனாதிபதி ஏற்கனவே 2000 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கொடுக்க முன்வந்த இடைக்காலத் தீர்வுத்திட்டமும், தற்சமயம் சர்வதேச அழுத்தங்களால் ரணிலின் அரசாங்கம் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கொடுக்க இணங்கியிருக்கும் இடைக்காலத் தீர்வும், தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டே முன்வைக்கப்பட்டன. எனினும், ஜனாதிபதி தாம் முன்வைத்த திட்டத்தை உரிய முறையில் நகர்த்திச் செல்வதில் தோல்வி கண்டமை காரணமாக, அவர் சமாதான விரோதியாக தமிழ் மக்களால் அடையாளம் காணப்பட்டார்.

ஆரம்பத்தில் ஜனாதிபதி - தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக் காணவேண்டும் என்ற நோக்கில் இருந்தபோதும், அவருடைய அரசாங்கத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த - அனுருத்த ரத்வத்தை போரின் மீது அதீத நம்பிக்கை கொண்டமையும், அதன்பால் ஜனாதிபதி இழுத்துச் செல்லப்பட்டமையும் இதற்கான காரணங்களாகும். ஜனாதிபதி சந்திரிகா தமிழீழ விடுதலைப் புலிகள் நம்பிக்கை கொள்ளத்தக்க வகையில், நடந்துகொள்ளாததால், அவரால் சமாதான முன்னெடுப்பாக செயற்படமுடியாமல் போனது. நிலைமை அவ்வாறிருக்க, ஜனாதிபதி இன்று மேற்கொண்டுள்ள நடவடிக்கை, இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு நீண்டகால தாமதத்தை ஏற்படுத்திவிடும் நிலையை உருவாக்கியுள்ளது.

ஏனெனில், ஜனாதிபதி - நாட்டின் நிலை கருதி, பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றதாகக் கூறிக்கொள்ளும் அதேநேரம், தமது சொந்தக் கட்சி அரசியலை நிலைநிறுத்துவதில் முன்னின்று உழைக்கிறார். நல்லிணக்கம் எனக் கூறிக்கொண்டு, பிரதமருடன் பேச்சு நடத்தும் அவர் - அதில் முழு நம்பிக்கை கொள்ளாதவராக மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டிணைவு பேச்சுவார்த்தையை நடத்தி வருகிறார்.

மக்கள் விடுதலை முன்னணியுடன் இது வரை கூட்டிணைவு தொடர்பில், பத்துக்கும் மேற்பட்ட சந்திப்புக்களை ஜனாதிபதி நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்புக்களின் அடிப்படையில், இரண்டு கட்சிகளும் நாட்டில் இன்று அவசியப்படும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான எந்தவொரு திட்டங்களையும் பற்றிக் கதைக்கவில்லை என்பது தெளிவு.

ஏற்கனவே இடம்பெற்ற முதற்கட்டப் பேச்சுவார்த்தைகளின்போது, அதிகாரப் பரவலாக்கலை எதிர்க்கும் மக்கள் விடுதலை முன்னணியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் - இனப்பிரச்சினைத் தீர்வில் ஒன்றுசேர்ந்து செயற்பட முடியாது என்ற உண்மை தெரியவந்து விட்டது.

அப்படியெனில், தற்போது மீண்டும் கூட்டிணைவு எனக் கூறப்படும் பேச்சுவார்த்தைகள்- நிச்சயமாக சம்பந்தப்பட்ட இரண்டு கட்சிகளினதும் எதிர்கால நலன், அதாவது ஐக்கிய தேசியக் கட்சியைத் தோல்விகாணச் செய்து, அதன்மூலம் நாட்டின் ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கம் கொண்டவையாகும். மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல், நாட்டின் அனைத்து மக்களுக்கும் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் எனப்பேசிவந்த அதேநேரம், சிங்கள கடும்போக்குத் தன்மையை அது கடைப்பிடித்து வந்தது.

கம்யூனிஸக் கொள்கைகளிலிருந்து அந்தக் கட்சி விலகிச் சென்றுவிட்டதை ஏற்கனவே ஏனைய கம்யூனிஸ கொள்கைகளைக் கொண்ட இலங்கை கம்யூனிஸகட்சி, லங்கா சமசமாஜக் கட்சி - வாசுதேவ நாணயக்கார மற்றும் விக்கிரமபாகு கருணாரட்ண ஆகியோரின் கட்சிகள் வெளிப்படுத்தி வந்துள்ளன.

இன்று அந்தப் பேர் மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு பிரச்சினையின் பின்னர், நாட்டிலிருந்து வெளியேறிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க - அண்மையில் விடுத்திருந்த அறிக்கை இதற்கு சான்றுபகர்கின்றது. இலங்கையில் நிலவிவரும் இனப்பிரச்சினை காரணமாக, சிங்கள மக்கள் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகவும், அவர்களின் பாதுகாப்புக்கு கேள்வி எழுந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கை உண்மையாக மக்கள் விடுதலை முன்னணியின் உருவத்தை வெளிக்காட்டியுள்ளது. தென்னிலங்கைபோலவே, மக்கள் விடுதலை முன்னணியும், சிங்களக் கடும்போக்குவாதத்தைக் கடைப்பிடித்து, சிங்கள மக்களின் வாக்குகளை அபகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது என்பது இதிலிருந்து புரிகிறது.

மக்கள் விடுதலை முன்னணியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் நடத்திவந்த கூட்டிணைவுப் பேச்சுக்கள் - இறுதியடைந்திருப்பதாகவே இரண்டு கட்சிகளும் கூறுகின்றன.

ஒப்பந்தம் மட்டுமே எஞ்சியிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், ஏற்படுத்திக் கொள்ளப்படும் இந்த ஒப்பந்தத்தின்மூலம், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தனிக்கட்சி அதிகாரம்- பாரியளவில் வீழ்ச்சியடையும் என்றே அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

1989 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும், 1977 ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலும் மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியின்போது, பெருமளவான சிறிலங்கா சுதந்திரக்கட்சி

> **2001 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த ஆதரவை மக்கள் தற்சமயம் தமக்குத் தந்துள்ளார்கள் எனக் கூறிக்கொள்ளவே விருப்பம் கொண்டுள்ளனர். இதற்காக மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து, பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதா? அல்லது மாகாணசபைகளின் தேர்தலுக்குச் செல்வதா? என்பதை ஜனாதிபதி யோசித்துக் கொண்டிருக்கிறார்.**
>
> **ஐக்கிய தேசியக் கட்சி - பொதுத் தேர்தல் ஒன்றை இலக்கு வைத்திருப்பதால், அதனைத் தவிர்த்து, மாகாணசபைத் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதையே அவர் விரும்புபவராகக் கூறப்படுகிறது.**

உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் கொல்லப்பட்டனர். அவர்களின் உடமைகளுக்கும் சேதங்கள் விளைவிக்கப்பட்டன. அவ்வாறு பாதிக்கப்பட்ட மக்கள் பிரிவினர் - சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைவதைத் தொடர்ந்து எதிர்த்து வருகின்றனர். இந்த நடவடிக்கை, மக்கள் விடுதலை முன்னணிக்கே வளரும் வாய்ப்பை வழங்கும் எனவும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி வீழ்ச்சி நிலைக்குத் தள்ளப்படப்போகிறது என்பதுமே அவர்களின் கருத்தாக உள்ளது.

இது கருத்தாக வெளிப்பட்டாலும்கூட, மக்கள் விடுதலை முன்னணியினரின் இறுதி இலக்கும் அதுவாகத்தான் இருக்கப்போகிறது. இலங்கையின் அரசியலில் கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் - மூன்றாவது சக்தியாக மக்கள் விடுதலை முன்னணி விளங்கியது.

பின்னர் வந்த காலப்பகுதியில் இடம்பெற்ற தேர்தல்களின் மூலமும், இனப்பிரச்சினைத் தீர்வு முன்னெடுப்புக் காரணமாகவும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பன - அரசியலில் மூன்றாவது சக்தியாக விளங்காதபோதும், அந்த மூன்றாவது சக்திக்குச் சவால்விடும் நிலைக்கு தம்மை வளர்த்துக்கொண்டன.

இது மக்கள் விடுதலை முன்னணியை யோசிக்க வைத்துவிட்டது. தொடர்ந்தும் தமது கொள்கைகளை மக்கள் முன்வைத்து, ஆட்சிக்குச் செல்லமுடியாது. எனவே, ஐக்கிய தேசியக் கட்சியைக் காட்டிலும், நலிந்துபோயிருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை, அதற்காகப் பயன்படுத்தலாம் என்ற நிலைப்பாட்டுக்கு மக்கள் விடுதலை முன்னணி வந்தது. ஆரம்பத்தில் இதனைச் சிறிலங்கா சுதந்திரக்கட்சி- தமக்குச் சாத்தியமாகப் பயன்படுத்த முனைந்தது. மக்கள் விடுதலை முன்னணியை அதிகாரப் பரவலாக்கல் நிலைப்பாட்டை ஏற்கச் சென்று, அதன்மூலம் மீண்டும் ஆட்சியை ஏற்படுத்தலாம் எனச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எண்ணியது.

அதிகாரப் பரவலாக்கல் கொள்கையை மக்கள் விடுதலை முன்னணி ஏற்றுக்கொண்டால், கடும்போக்கு மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்போலவே செயற்பட வேண்டியநிலை உருவாகிவிடும். எனவே, மக்கள் விடுதலை முன்னணியினருடன் பேசிப்பார்ப்போம் என்றே ஜனாதிபதியும் முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால், நிலைமை மாறியது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் எவரை வெற்றிகொள்ளலாம் என நினைக்கிறார்களோ, அது மாற்றம் அடைந்து, மக்கள் விடுதலை முன்னணியினர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பெரும்பாலானோரை தம்பக்கம் இழுப்பதில் வெற்றிகண்டுள்ளனர். இதற்கு ஒரு உதாரணம் - சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மங்கள சமரவீர, அர்ஜுன ரணதுங்க போன்றோர் - மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாடுகளில் நேரடியாகவே பங்குகொண்டு வருவதாகும்.

மக்கள் விடுதலை முன்னணிக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் கடந்தவாரம் இடம்பெற்ற இறுதிப் பேச்சுவார்த்தையில், மக்கள் விடுதலை முன்னணியால் விடுக்கப்பட்ட எச்சரிக்கை இரண்டாவது உதாரணமாகும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதி இணக்கம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளும் பட்சத்தில் தமது முன்னணி, ஜனாதிபதியின் கட்சியுடன் கூட்டிணைந்து செயற்பட வாய்ப்பில்லை என, முன்னணியின் செயலர் ரில்வின் சில்வா - ஜனாதிபதிக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். இதற்கு ஜனாதிபதியினால் உரிய பதிலை அளிக்க முடியாமல் போய்விட்டது.

எனினும், மக்கள் விடுதலை முன்னணியுடனான கூட்டே சிறந்தது என்ற தொனியில் தமது பதிலை வழங்கினார். மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதியிடமிருந்து பாதுகாப்பு அமைச்சை மீளப்பெற்றுக் கொள்வதில் முயற்சிகளை மேற்கொண்டு, தற்சமயம் களைத்துப்போய்விட்டது. எனவே, இனப்பிரச்சினைத் தீர்வு என்பதை மையப்படுத்திக்கொண்டே அடுத்த தேர்தல் ஒன்றுக்கான ஆயத்தங்களில் அது ஈடுபட்டுவருகிறது.

பிரதமர் இதன் ஒரு கட்டமான நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் விஜயம் செய்து, தமது நிலைப்பாட்டை விளக்கி வருகிறார். ஜனாதிபதியுடன் இணங்கி, பாதுகாப்பு அமைச்சு விடயதத்தில் எதனையேனும் செய்யலாமா எனப் பிரதமர் எதிர்பார்த்தபோது, பாதுகாப்பு அமைச்சை மீண்டும் பிரதமரிடம் கொடுத்துவிட்டால், தமது பலம் வலுவிழந்துவிடும் என ஜனாதிபதி அச்சம் கொண்டுள்ளார். எனவே, இலங்கையின் அரசியலமைப்பைச் சுட்டிக்காட்டி, பாதுகாப்பு அமைச்சை அரசாங்கத்திடம் கொடுக்க மறுதது வருகிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியினர், பொதுஜன ஐக்கிய முன்னணியினரின் செயற்பாடுகள்- இலங்கையில் இன்று அரசியல் முடக்க சூழ்நிலையில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஆனாலும், அந்த முடக்கத்திலிருந்து மீளுவதற்கு வழியில்லை என்றே இன்றைய அரசியற் சூழ்நிலை தெளிவுறுத்துகிறது.

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை மீண்டும் தரமுடியாது என்ற நிலையில், ஜனாதிபதியுடன் இணக்கத்தைக் கொண்டுவர முயற்சித்துக்கொண்டிருக்கும் மனோ தித்தவெல, மலிக் சமரவிக்கிரம குழுவும் - பெரும்பாலும் செயலிழந்துவிட்டது. ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் இணக்கம் ஒன்றைக் காணுவதற்கான இறுதிநாள் - நாளை 15 ஆம் திகதியாகும். இது நீடிக்கப்படக்கூடிய ஏதுநிலை இதுவரை கூறப்படவில்லை.

இந்தநிலையில், நாட்டின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சி நிலைக்குச் செல்லும் ஆபத்து மீண்டும் எழுந்துள்ளது. இலங்கையில் உறுதியான அரசாங்கக் கட்டமைப்பு இல்லாமை காரணமாக, வெளிநாடுகள் யாவும் தமது உதவித் தொகைகளை இடைநிறுத்தியுள்ளன.

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டால் மாத்திரமே, வெளிநாட்டு உதவிகள் இலங்கைக்குக் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சிப் போக்கில் சென்றுகொண்டிருக்கும் அதேநேரம், அதனைச் சரிப்படுத்தும் திட்டம் எதனையும் ஜனாதிபதியினால் முன்வைக்க முடியவிலலை. அதனைவிடுத்து, அவர் தேர்தல் ஒன்றை நடத்தி, அதில் வெற்றிபெற்று, 2001 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த ஆதரவை மக்கள் தற்சமயம் தமக்குத் தந்துள்ளார்கள் எனக் கூறிக்கொள்ளவே விருப்பம் கொண்டுள்ளனர்.

இதற்காக மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து, பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதா? அல்லது மாகாணசபைகளின் தேர்தலுக்குச் செல்வதா? என்பதை ஜனாதிபதி யோசித்துக் கொண்டிருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சி - பொதுத் தேர்தல் ஒன்றை இலக்கு வைத்திருப்பதால், அதனைத் தவிர்த்து, மாகாணசபைத் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதையே அவர் விரும்புபவராகக் கூறப்படுகிறது. நாட்டில் சமாதான சூழ்நிலை ஏற்பட்டுள்ளபோதும், சிங்கள மக்கள் மத்தியில் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் விட்டுக்கொடுப்புப் போக்கு அருகி வருவதாக, மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனத்தின் பிராந்தியக் கருத்துக்கணிப்புக் கூறுகிறது.

இதனடிப்படையில், வடக்கு - கிழக்குக்குக் கூடிய அதிகாரங்கள் வழங்கப்படுவதை அதிகமான சிங்கள மக்கள் எதிர்க்கின்றனர்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்ந்தும் பேணப்படவேண்டும் என, 61 வீதமானோர் விரும்புகின்றனர். சமாதானத்தால் தமிழர்களே கூடிய நன்மை பெறுவர் என 8 வீதமான சிங்கள மக்கள் இன்னமும் நம்புகின்றனர். இதற்கான காரணம் சமாதானம் பற்றிய எண்ணம் நாட்டில் 35 வீதமானோருக்கு இல்லை என்பதும், 60 வீதமானோர் ஓரளவு தெரிந்து வைத்திருக்கின்றனர் என்பதுமேயாகும்.

### போராளிகளால் மேற்கொள்ளப்பட்ட

# ஐவரிகோஸ்ட் இராணுவ முகாம் மீதான தாக்குதல் தோல்வியில் முடிவடைந்தது

ஐவரிக்கோஸ்டின் தேசிய தொலைக்காட்சி நிலையத்திற்கு வெளியே அமைந்திருந்த இராணுவப் பொலிஸாரின் தடைமுகாம் மீது ஆயுதக்குழுக்கள் நடத்திய தாக்குதல் தோல்வியடைந்துள்ளது.

இத்தாக்குதலில் 19 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். அதனருகில் அமைந்துள்ள பாதைகள் மூடப்பட்டு இறந்த உடல்கள் அகற்றப்பட்டுள்ளதாகவும் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

இதனிடையே - அரச படைக்கும் போராளிகளுக்கும் இடையே சுமுக நிலை தோன்றிவருவதாகவும், போராளிக்குழுக்கள் சில குறிப்பிட்ட இடங்களிலிருந்து பாரிய ஆயுங்களை அகற்றுவதற்கு உடன்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் போராளிக் குழுவின் உதவித்தலைவர் லூகுஷ் டாசோரி, பிரான்ஸினால் தயாரிக்கப்பட்ட சமாதான ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி கபக்போ முன்வந்துள்ளதாகத் தெரிவித்தார்.

பிரான்சின் முன்னாள் குடியேற்ற நாடான ஐவரிக் கோஸ்டில், 3800 சமாதானப் படையினர் கடமை புரிந்துவருகின்றனர். அரசினால் கட்டுப்படுத்தப்படும்



தென்பகுதிக்கும் - போராளிக் குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ள வடபகுதிக்கும் இடையே உள்ள பகுதியைப் பிரான்ஸ் படையினர் காவல்புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### ஐ.நா. சபை உறுப்பினர்கள்

# பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக ஆப்கானிலிருந்து வெளியேற திட்டம்!

## மறுசீரமைப்புப் பணிகளும் நிறுத்தப்படும்

(பாக்தாத்)

ஆப்கானிஸ்தானில் வன்முறைகள் அதிகரித்துவருவதனால், அங்கு நடைபெறும் மறுசீரமைப்புப் பணிகளை கைவிடப்போவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் மறுசீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் ஐக்கிய நாடுகள் சபை உறுப்பினர்களுக்கு, பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாகவே இந்த முடிவினை ஐ.நா. சபை எடுத்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் கிழக்கு மற்றும் தென் பகுதிகளில் - தலிபான்கள் நடத்திய தாக்குதலில் 11 ஐ.நா. உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

இதனால், ஆப்கானிஸ்தானில் மறுசீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு இருக்கும் ஐ.நா. உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. எனவே, எதிர்வரும் காலங்களில் மறுசீரமைப்புக் குழுவினருக்கு பாதுகாப்பு வழங்கப்படும் பட்சத்தில் மட்டுமே மீண்டும் தமது மறுசீரமைப்புப் பணிகளைத் தொடரமுடியும் என, ஆப்கானிஸ்தானுக்கான ஐ.நா. அதிகாரி தெரிவித்தார்.

## உலக நோக்கு

# ஈராக்கில் நடைபெற்ற தாக்குதலில் அமெரிக்கப் படையினர் ஒருவர் பலி

பாக்தாத்தின் தென்பகுதியான ரமடியில் வெள்ளிக்கிழமை - அமெரிக்க தொடர் அணிமீது நடத்தப்பட்ட தாக்குதலில் படையினர் ஒருவர் கொல்லப்பட்டும் இருவர் காயங்களுக்குள்ளாகியும் உள்ளனர்.

காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்ட பின்பே ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இதனிடையே நிலக்கண்ணிவெடியில் பொருத்தப்பட்டிருந்த குண்டொன்று பாக்தாத்தின் தென்பகுதியான மகாவ்ல் என்ற இடத்தில் வெடித்ததில் போலந்து நாட்டு வீரர்களின் தொடரணியில இருவர் காயபட்டுள்ளனர்.

மேலும் அமெரிக்காவின் கூட்டுப் படைத் தலைமையகத்தின் மீது மோட்டார் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டபோது இரு அமெரிக்கப் படையினர் காயமடைந்துள்ளனர்.

# பெற்றோர்களின் எதிர்ப்பினையடுத்து மணமகளைக் குருடாக்கிய மணமகன்

பாகிஸ்தானியர் ஒருவர், தான் திருமணம் செய்துகொள்ளத் திட்டமிட்டிருந்த பெண்ணின் பெற்றோர் தெரிவித்த எதிர்ப்பினால் ஆத்திரமுற்று, அந்தப் பெண் மீது திராவகத்தைத் தெளித்து அந்தப் பெண்ணின் கண்களைக் குருடாக்கியதுடன், முகத்தையும் சிதைத்துள்ளார். இச்சம்பவம் பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணத்தில் நடைபெற்றுள்ளது.

பஞ்சாப் மாகாணத்தில் அமைந்துள்ள பகவல்பூர் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, 'மொஹமட் சயீட் என்ற அந்தப் பாகிஸ்தானியர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

முஸ்லிம்களின் குயிஷாஷ் சட்டத்தில் - 'குற்றம் எதுவோ தண்டனையும் அதுவாக அமையலாம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மொஹமட் சயீட்டின் முகத்தில் படிப்படியாக திராவகத்தை வீசி, கண்ணைக் குருடாக்கி முகத்தைச் சேதமாக்குமாறு நீதிபதி தீர்ப்பளித்ததாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

இதனிடையே மனித உரிமைக் குழுக்கள் இத்தீர்ப்பின் மீது தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளன. மேலும் இந்தத் தீர்ப்பினை நிறுத்தும் உரிமை பாதிக்கப்பட்ட பெண்ணின் பெற்றோருக்கு உண்டெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் கிராமப்பகுதிகளில் வாழும் பழங்குடி முஸ்லிம் மக்களிடையே திராவகம் வீசி பெண்ணின் முகத்தை சேதமாக்குவது வழமையான நிகழ்வு எனவும், இதுவரை இதுபோன்ற 70 இற்கு மேற்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

# நேபாள மாவோ தீவிரவாதிகள் உத்தரப் பிரதேசத்தில் சிகிச்சை!

## இந்தியப் பொலிஸார் தெரிவிப்பு



நேபாளத்தில் அரசபடையினருடன் போரிட்டுவரும் மாவோ தீவிரவாதிகள், தமது வைத்திய சிகிச்சைகளுக்காக இந்திய மாநிலமான உத்தரப்பிரதேசத்தின் வடபகுதிகளில் அமைந்துள்ள வைத்தியசாலைகளுக்குச் செல்வதாக இந்தியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவிற்கும் நேபாளத்திற்கும் இடையே, 485 மைல் நீளமான எல்லையை இரு நாட்டுப் படையினரும் காவல்புரிந்து வருகின்றனர்.

சட்டவிரோதமாக இந்தியாவிற்குள் நுழைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்ற மாவோ தீவிரவாதிகளை அண்மையில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்தியப் பொலிஸார் வைத்தியசாலைகளில் முற்றுகைகளை மேற்கொண்டு தீவிரவாதிகளைக் கைதுசெய்து வருவது குறிப்பிடத்தக்கது. இதேவேளை - இந்திய கம்யூனிஸ குழுக்களுக்கும் மாவோ தீவிரவாதிகளுக்கும் இடையே தொடர்புகள் இருப்பதாகவும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.





அமெரிக்கப் படையின் நான்காவது படைப்பிரிவினருக்கும், சதாம் ஹூசைனின் படைப்பிரிவினருக்கும் இடையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சமரில் - கொல்லப்பட்ட ஹூசைனின் படைப்பிரிவைச் சேர்ந்த ஒருவரை அமெரிக்கப் படையினர் பார்வையிடுவதை முதலாவது படத்திலும், மற்றொருவரைக் கைது செய்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# இஸ்ரேல் படையின் தாக்குதலில் பலஸ்தீன இளம்பெண் மரணம்

(இஸ்ரேல்)

பலஸ்தீனத்தின் மேற்குக்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள இஸ்ரேலியப் படையினரின் வீதித் தடையொன்றில் - நிறுத்தாது சென்ற வாகனமொன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், ஹம்லே அல்-சூலி (வயது 20) என்ற பலஸ்தீனப் பெண், மார்பில் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்ததால், வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு மரணமடைந்ததாக வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வண்டியில் மேலும் 7 பேர் பிரயாணம் செய்ததாகவும், நப்லஸ் நகருக்கு அதிகாலை நேரத்தில் பயணம் செய்துகொண்டிருந்த நேரத்திலேயே இச்சம்பவம் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிகாலை வேளையில் படையினரின் பரிசோதனைகள் குறைவாக இருக்கும் என்ற காரணத்தினாலேயே இவர்கள் பயணம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்கொலைக் குண்டுதாரிகளின் தாக்குதல்களிலிருந்து இஸ்ரேலிய மக்களைப் பாதுகாப்பதற்கு இந்த வீதித்தடைகள் தேவையென இஸ்ரேல் தெரிவித்துள்ளது.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மோட்டார் பதிவு ஆவணங்களை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிப்பு!

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நடமாடும் சேவையின்போது, மோட்டார் சைக்கிள் ஆவணங்களைப் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்கள் உடன்வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் நடத்தப்பட்ட நடமாடும் சேவையின்போது, ஆவணங்களைப் பெறுவதற்காக பலர் விண்ணப்பித்திருந்தார்கள்.

இதன்போது விண்ணப்பித்தவர்களில், 4730 பேரின் சாரதி அனுமதிப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்ட போதிலும், 540 பேர் மட்டுமே அதனைப் பெற்றுள்ளனர்.

2068 வாகனங்களுக்கான இலக்கத்தகடுகள் யாழ். வந்துள்ளன. இதில் 72 பேர் மட்டுமே அதனைப் பெற்றுள்ளனர். இத்துடன் 1660 பதிவுச் சான்றிதழ்களும் எடுத்துவரப்பட்டுள்ளன.

மேற்படி ஆவணங்கள் கடந்த வாரம் முதல் வழங்கப்பட்டு வந்த போதிலும் மிகக்குறைந்தளவானோரே அதனைப் பெற்றுள்ளனர்.

இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்களுக்காக - இன்றும் விசேட சேவை நடத்தப்படுகிறது. இந்த விசேட சேவையில் - இன்று காலை 9.30 மணிமுதல் 3.30 மணிவரை ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விநியோகிக்கப்படாத ஆவணங்களை கொழும்பிலுள்ள தலைமை அலுவலகம் திருப்பி அனுப்புமாறு அறிவித்துள்ளதையடுத்து, இவை கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன. இதனை இன்று விசேட சேவையில் இந்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாவட்ட போக்குவரத்து திணைக்களத்தின் உதவி ஆணையாளர் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

## நாற்சந்தி

"ஜனாதிபதியும், பிரதமரும் விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கான திட்டவரைபை நுணுகி ஆராயத் தொடங்கி இருக்கினமாம்!"

"ஏற்கனவே 'தேசிய அரசு' தொடர்பான யோசனைகளை இருதரப்பும் ஆராய்ந்து களைத்துப் போய்விட்ட நிலையில் இதை ஆராயத் தொடங்கி இருக்கினம்போலை...!"

"ஏற்கனவே சந்திரிகா இந்தத் திட்ட வரைபை ஏற்றுக்கொள்ள முடியாது, இது தமிழீழத்துக்கான முன் வரைபு என்றெல்லாம் கூறினவரெல்லே...?"

"ஓமோம் அம்மையாரை பின்னால நின்று வழி நடாத்தும் இந்தியாவும் இந்த திட்ட வரைபை தங்களால் ஏற்க முடியாது என்று கருதுவதாக அண்மையில் ஒரு இந்திய முன்னாள் ராஜதந்திரியான ராஜ்கோத்ரா கூறினது தெரியுமெல்லே...!"

"அதுக்கென்ன செய்யிறது... அமெரிக்கப் பேராசிரியர் ஒருவர் விடுதலைப்புலிகளின் திட்டவரைபு அவர்களது முழுமையான திட்டம். அதை வரவேற்க வேண்டுமென்றெல்லே சொல்லிப்போட்டார்...!"

"ஆக இந்தியா ஒருபுறம், அமெரிக்கா மறுபுறம்... சந்திரிகாவுக்கும், ரணிலுக்கும் இரண்டு பக்கமும் இடிதான்..."

"சொந்தப்பிரச்சினைக்கு அயலவரிட்டயும் அந்நியரிட்டையும் உதவி கேட்கப் போனா, என்னென்ன உபத்திரவம் எல்லாம் வரும் எண்டு விளங்கட்டும்..."

"அது கிடக்கட்டும் இப்ப இரண்டு பேரும் திட்டவரைபை நுணுகி ஆராய்ந்து என்ன சொல்லப் போகினமாம்?"

"சிறிலங்காவின் அரசியல் ஆராய்ச்சியாளர்கள் அரைநூற்றாண்டா ஆராய்ஞ்சு ஒண்டையும் உருப்படியா செய்யேல்லை... இனிமேல்தான் செய்யப்போகினமே...?"

"அப்ப இதுவும் காலம் கடத்தும் கண்துடைப்பு நடவடிக்கைதான் என்று சொல்லு..."

-தெருவாசி

# பல்கலைக்கழகங்களில் மூன்று புதிய கற்கை நெறிகள் அடுத்த வருடத்தில் அறிமுகமாகும்

(கொழும்பு)

அண்மையில் வெளியாகிய இசற்ஸ்கோர் அடிப்படையிலான பல்கலைக்கழக அனுமதிகள் தொடர்பாக மேன்முறையீடு செய்யவிரும்பும் மாணவர்களை அடுத்த நான்கு வாரங்களுக்குள் விண்ணப்பிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மெண்டிஸ் தகவல் வெளியிடுகையில்,

அடுத்த கல்வியாண்டுக்கு பல்கலைக்கழகங்களுக்கு 12,623 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், மேலும் 1000 மாணவர்கள் விசேட தகைமை அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

2003 ஆம் 2004 ஆம் கல்வியாண்டில் மூன்று புதிய கற்கை நெறிகளை அறிமுகப்படுத்த மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்திருக்கின்றது. இந்த கற்கைநெறிக்கான ஆகக்குறைந்த இசற்ஸ்கோர் புள்ளிகளும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

களனிப் பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ள சமாதானம் மற்றும் மோதலுக்கு தீர்வு காணல் என்ற கற்கைநெறிக்கு 28 மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

புடவை வடிவமைப்பு கற்கைநெறிக்காக, மொரட்டுவ பல்கலைக்கழகம் 42 மாணவர்களையும், உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் என்ற கற்கைநெறிக்கு 79 மாணவர்களை சிறி ஜெயவர்த்தனபுர மற்றும் பேராதனை ஆகிய பல்கலைக்கழகங்கள் சேர்த்துக்கொள்ளவிருப்பதாக, மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மெண்டிஸ் தெரிவித்தார்.

## நாடாளுமன்ற தேர்தலுக்குத்...

நாட்டின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கெதிராக போராடவும் தயாராக இருக்கிறோம். நாடாளுமன்றமானது, சட்டரீதியான அதிகாரபீடத்தினால் உருவாக்கப்பட்டது. ஆனால், அரசியல் யாப்பிற்கு எதிராக அண்மைக் காலங்களில் தனது அணுகுமுறையை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளார்.

அத்துடன், அரசியல் யாப்பை பொறுத்தவரை அதன்படியே மக்கள் தற்போதைய அரசாங்கத்தை தேர்ந்தெடுத்துள்ளனர். எனவே, ஜனாதிபதியும் அரசியல் யாப்பின்படியே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து அமைச்சர்களும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழேயே இருக்கவேண்டும். இதன்மூலமே நாடாளுமன்றில் எமது பெரும்பான்மையை நிரூபிக்கமுடியும். இல்லையெனில, ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அமைச்சுக்களைப் பொறுப்பேற்றுவிடுவார். ஆகவே, சகல கட்சிகளும் அரசாங்கத்துடன் இணைந்து மக்கள் வழங்கிய ஆணையைக் கருத்திற்கொண்டு அரசியல் யாப்பினையும், நாட்டையும் பாதுகாப்போம்.

பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடம் இருக்க வேண்டுமென்று அரசியல் யாப்பின் எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலமுள்ள தரப்புடன் ஜனாதிபதி இணைந்து செயற்படவேண்டும் என்றே அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் பெரும்பான்மை பலமுள்ள குழுவுடன் ஜனாதிபதி இணைந்து செயற்படுவதற்காகவே அரசியல் யாப்பு அமைககப்பட்டது. எனவே அரசாங்கத்திடமிருந்த முக்கிய மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி பறித்தெடுத்திருப்பது அரசியல் யாப்புககு முரணான செயலாகும்.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையால், சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாதுள்ளது. அவ்வாறு பேச்சுக்கள் பாதிக்கப்பட்டால் நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலைக்கு பாதிப்பு ஏற்படும்.

போர்நிறுத்தத்தையும் சமாதான முயற்சியையும் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றால் அடுத்த இரண்டு வருடத்துக்குள் நாட்டில் பாரிய பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தமுடியும். கடந்த இரண்டு வருடத்துக்குள் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5.5 வீதமாக அதிகரித்துள்ளது. இதற்கு போர்நிறுத்த உடன்படிக்கையே முக்கிய காரணம் என அவர் தெரிவித்தார். (01)

## லொறி குடைசாய்ந்ததில்...

உயிரிழந்தவராவார்.

வட்டக்கச்சியைச் சேர்ந்த யோ. அன்ரன் சாள்ஸ் (வயது 25) என்பவரே படுகாயமடைநத நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டவராவார்.

## வங்காள விரிகுடாவில்...

விக்கப்பட்டுள்ளதாவது,

இந்தச் சூறாவளி மேலும் வலுவடைந்து வடமேற்கு திசையை நோக்கி நகருமென்றும், நாளை யாழ் குடாநாட்டுக்கு வடகிழக்காக 100 - 200 கி.மீற்றர் வரை நிலைகொண்டிருக்கக் கூடுமெனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதன்போது - வானம் மப்பும் மந்தாரமாக இருப்பதுடன், கடும் காற்றும் இடியுடன் கூடிய கடும் மழையும் வடக்கு - கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் பெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது

## இராணுவத் தளபாடக்...

கப்டன் கொலின் குணதிலகவும் அங்கம் வகிக்கின்றனர்.

நாளை கொழும்பிலிருந்து புறப்படும் இந்தக் குழுவினர், எதிர்வரும் 28 ஆம் திகதி வரை சீனாவில் தங்கியிருந்து ஆயுதக்கொள்வனவுக்கான நடவடிக்கையில் ஈடுபடுவர்.

அத்தோடு, ஆயுதத் தொழிற்சாலைகளுக்கு நேரடியாக விஜயம் செய்து கொள்வனவு செய்யக்கூடிய ஆயுதங்கள் குறித்துப் பரிசோதிக்கவிருப்பதாகத் தெரியவருகிறது.

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவிற்காக 5 ஆயிரத்தி 802 கோடி ரூபா அரசாங்கம் ஒதுக்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## முதியவர் வெட்டிக்...

கடந்த இருதினங்களுக்கு முன்னர் வீட்டைவிட்டு வெளியேறிய இவர் காணாமல் போயிருந்தார். பின்னர் இவரை தேடியபோது வல்வைப் பகுதியிலுள்ள நெசவுசாலைக்கு சமீபமாக சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (124),(202)

## நிலத்திலிருந்து...

வெளியேறியபின் உறைய ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் அந்தப்பகுதி மக்களை ஆச்சரியத்திற்கும் வியப்பிற்கும் உள்ளாக்கியுள்ளது. இதனை பெருமளவான மக்கள் சென்று பார்வையிட்டுவருகின்றனர்.

இந்த வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்காக புவியியல் நிபுணர்கள் அம்பாந்தோட்டைக்குச் சென்றுள்ளனர். (01)

## மிதிவெடியில்...

கிளிநொச்சி, பரந்தன், வீதி திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த வேளையே இந்த மிதிவெடி வெடித்ததில் இவர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப்பகுதி முன்னர் இராணுவ கட்டுப்பாட்டில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இனந்தெரியாதோர்...

கொண்டிருந்தபோது, இவரைப் பின்தொடர்ந்து துவிச்சக்கரவண்டியில் வந்த இருவர் குருமன்காட்டுப் பகுதியில் வைத்து இவரைச் சுட்டுவிட்டு தப்பிச்சென்றதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திலிருந்து சடலத்தை எடுத்த வவுனியா பொலிஸார் - பிரேத பரிசோதனைக்காக வவுனியா ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். இதனையடுத்து, பொலிஸாரால் வீதிகளில் சென்ற வாகனங்கள் மறித்து சோதனையிடப்பட்டன. (03)

## உயர் பாதுகாப்பு...

ஒப்பந்தத்தின் பின்னர் கூட, சொந்த இடங்களில் குடியேற அனுமதிக்குமாறு தாம் கேட்டபோது, சம்பந்தப்பட்டவர்களால் அது நிராகரிக்கப்பட்டதெனவும் தெரிவித்த அவர்கள், இந்த நடவடிக்கை தமது அடிப்படை மனிதஉரிமை மீறலென உயர்நீதிமன்றின் மனுவில் தெரிவித்துள்ளனர்.

SPOKEN ENGLISH WITH GRAMMAR
LECTURES BY
Mr.M.A.HARY
புதிய பிரிவு ஆரம்பம்
14.12.2003 ஞாயிறு
இன்று மாலை 3 மணி
(புதியநேரம்)
Sunday / Saturday 3 P.m- 4 P.m
HARY'S INSTITUTE
இல. 564, கஸ்தூரியார் வீதி,
(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.
(சி-1886)

பாராட்டி வாழ்த்துகிறோம்
திரு.எஸ்.காண்டீபன் ஆகிய என்னால் தவறவிடப்பட்ட பெருந்தொகைப்பணத்தை கண்டெடுத்து மிகவும் பெருந்தன்மையோடு என்னிடம் மீள ஒப்படைத்த கௌரி இல்லம் தேவரையாளி நெல்லியடி வடக்கைச் சேர்ந்த திரு.வல்லிபுரம் சந்திரலிங்கம் அவர்களை நன்றியுணர்வோடு பாராட்டி வாழ்த்துகிறோம்.
திரு.எஸ்.காண்டீபன்
திரு வீடியோவிஷன்
மூத்தவிநாயகர் கோவிலடி,
கரணவாய், கரவெட்டி
T.P:- 0777 841243
(554)

O/L தோற்றிய மாணவர்களுக்கான கணனி வகுப்புகள்
உங்கள் A/L கல்வியைக் கருத்தில் கொண்டு திட்டமிடப்பட்டது
MS Office Programming



யாழ் மாவட்டத்தில் தனித்துவமான கணனிக்கல்வியை வழங்கிவரும் நாம், இம்முறை O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்காக நன்கு திட்டமிடப்பட்ட அவர்களுக்கு மிகஅத்தியாவசியமான பாடத்திட்டத்தைக் கொண்ட பயிற்சிநெறியை அறிமுகம் செய்கின்றோம். தமிழ் மொழிமூல விளக்கவுரையைக் கொண்ட இத்திட்டம் எமது வழமையான தேர்ச்சிபெற்ற விரிவுரையாளர்களினால் நெறிப்படுத்தப்படுகின்றது. இது எமது சாவகச்சேரிக் கிளைக்குமானது.
ஆரம்பம்: 20-12-2003 சனி காலை 10.00
NO SCHOLORSHIP BUT VALUABLE FEES
காலம்: 3 மாதம்
73, Palaly Road, Kantharmadam.
Branch: Sankaththanai, Chavakachcheri
STP Your Partner in IT Solution T.P:2222674

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.